www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 16 ரூபா 8/50
30.05.1993

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1



உலக ரவுண்டப்

தகவல் பெட்டி

ஆச்சரியமான செய்திகள்

லேடீஸ் ஸ்பெஸல்



## அடுத்த ஜனாதிபதி யார்? ஒரு எக்ஸ்ரே ரிப்போர்ட்

பக்கம் 7

அரசியல் அதிரடி

வாசகர் பரிசுப் போட்டிகள்



சுப்பர் ஸ்ரார் பற்றிய சுப்பரான செய்திகள்



ரணில் விக்ரமசிங்கே

சிறிமாவோ பண்டாரநாயக்கா

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# முரசம்

அன்பான உங்களுக்கு,
வணக்கம்.

புதிய இதழ் ஒன்று
வருகிறது என்றவுடன்
மாற்றத்தை விரும்பும் வாசகநெஞ்சங்களின்
எதிர்பார்ப்புகள், வரவேற்புகள்.
அதே சமயத்தில்-
சிலரது முனகல்கள், முட்டுக்கட்டைகள்.
அவற்றினை முறியடித்து
தினமுரசு
இன்று
முகம் உயர்த்தி இருக்கிறது
பத்திரிகைத்துறையில்
சவால்கள் சகஜம்
அதற்காக
சமரசம் கூடாது
என்பதே
தினமுரசின் கொள்கை.

தினமுரசு யாரையும் சீண்டாது.
சீண்டினால்-
வலிமை காட்டவும் தயங்காது.
சரி எனப்பட்டதை எடுத்துச் சொல்லுவோம்.
எந்த மனிதனுக்கும்-
ஒரு கொள்கை இருக்க வேண்டும்.
நமது பத்திரிகையில் உள்ளவர்களுக்கும்
அது இருக்கும்.
இல்லை என்று சொன்னால்
அது பொய்.

ஆனால்-
அவர்களது கொள்கைகள்
அவரவர் தனிப்பட்ட உரிமைகளாகவே இருக்கும்.
தினமுரசில்-
அவை திணிக்கப்பட
அனுமதிக்கப்பட மாட்டாது.
அதுதான்
நமக்கும் ஏனையோருக்கும்
உள்ள வித்தியாசமாக இருக்கும்.

தினமுரசு வாரமலர்-
ஜனரஞ்சகத்தன்மையை
முதன்மைப்படுத்துகிறது.
அரசியல் செய்திகளை
பக்கம் சாராமல்-
இன மத பேதம் காட்டாமல்
துணிச்சலாக அலசும்.
உங்கள் திருப்தியும்-
நவீன உலகின்
புதிய தரத்துக்கேற்ற
அம்சங்களை வழங்குவதும்-
எங்கள் இலக்காக இருக்கும்.

உங்களை மகிழ்ச்சிப்படுத்தும்
வாசகர் பரிசுத் திட்டங்கள்
மேலும் பல-
அடுத்த வாரம் முதல் ஆரம்பமாகும்.

இனியது வாழ்க்கை.
அதனை மேலும் இனிதாக்கும்
அம்சங்களை அள்ளித்தருவோம்.

இதுவரை நம்மோடு
ஒத்துழைத்த நண்பர்கள்
முகவர்கள், மற்றும்
பத்திரிகைத்துறை சார்ந்தவர்கள்
அனைவருக்கும்
நன்றி சொல்வதோடு
தொடர்ந்தும்
தினமுரசின் வளர்ச்சியில்
உங்கள் பங்கை நாடுகிறோம்.

இதுமுதல் முயற்சி.
அடுத்து வரும்-
இதழ்கள்
உங்களை
மேலும் அசத்தும்.
அந்த நம்பிக்கையோடும்-
உங்களுக்கு வாழ்த்துக்களோடும்-

அன்புடன்,
ஆசிரியர்.

இறக்குமதிச் சிரிப்பு






தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளர் பட்டுக்கோட்டை பிரபாகரின் பிரத்தியேக சிறுகதை அடுத்த வாரம் இடம்பெறுகிறது.

## புகார் பெட்டி

உங்கள் பகுதிகளில் உள்ள குறைபாடுகளை நீங்களும் எழுதி அனுப்பலாம். தகவல் உண்மையானதாக இருக்க வேண்டும். உங்கள் சொந்த முகவரி குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

## வாசகசாலை

வாசகர்களின் கருத்துக்களைத் தாங்கி வரும் பகுதி இது. சிறந்த கடிதம் ஒன்றிற்கு வாரம் தோறும் ரூபாய் நூறு பரிசாகக் காத்திருக்கிறது. உங்கள் கடிதங்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி,

வாசகசாலை
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

## அன்னை தெரேசா



யூகோஸ்லாவியாவில் பிறந்த அன்னை தெரேசா 1948ம் ஆண்டு இந்தியாவின் குடியுரிமை பெற்றார். 1950ல் அவரது சமூக சேவை நிறுவனத்திற்கு போப்பாண்டவர் அங்கீகாரம் கொடுத்தார். அன்னை பெற்ற விருதுகள்; நேரு சமாதானப் பரிசு, பத்மஶ்ரீ, பாரத ரத்னா, மற்றும் நோபல் பரிசு, போப்பாண்டவரின் சமாதானப் பரிசு, அமெரிக்காவின் மிக உயர்ந்த கௌரவமான சுதந்திரப் பதக்கம், மெகாசசே விருது, பிரிடனின் மிக உயர்ந்த கௌரவமான ஆர்ட்ஒவ் மெரிட் விருது.

எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியூயோர்க்கில் ஒரு புகலிடத்தை ஆரம்பித்துள்ள அன்னை தெரேசா, ஏழைகள், முதியோர், ஆதரவற்றோருக்கு ஆதரவுக்கரம் நீட்டி அரவணைத்து வருகிறார்.

அன்னை தெரேசாவிற்கு இப்போது 82 வயது. ரோம் நகரில் கீழே விழுந்ததில் அவரது விலா எழும்புகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மருத்துவமனையில் இருக்கும் அந்த அன்புத்தாய் நலம் பெற்று வரவேண்டும். பணியைத் தொடரவேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

## சிந்தியா பதில்கள்

உங்கள் கேள்விகளைச் சிந்தியாவிடம் கேளுங்கள். கேள்விகள் சுவாரசியமானதாக இருக்கட்டும்.

## கவிதைப் போட்டி



மேலே உள்ள படத்தைப் பார்க்கும்போது உங்கள் உள்ளத்திலே உற்பத்தியாகும் எண்ணங்களை பதினைந்து வார்த்தைகளுக்கு மேற்படாத கவிதை ஆக்கி எமக்கு அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றிற்கு சிறப்புப் பரிசாகப் புதிய திரைப்படப் பாடல் கசெட் ஒன்று காத்திருக்கிறது.

## முக்கிய அறிவித்தல்

தினமுரசு வாரமலரில் உங்கள் ஆக்கங்கள் உங்கள் எண்ணங்கள் பிரசுரமாகும். சுருக்கமாகவும் சுவையானதாகவும் இருப்பது முக்கியம். தினமுரசோடு நீங்கள் வைத்துக் கொள்ளும் எந்தக் கடிதத் தொடர்புகளுக்கும் கீழ்க்காணும் முகவரிக் கூப்பனையே பயன்படுத்த வேண்டும்.

### முகவரிக் கூப்பன்கள்

தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5.

தினமுரசு வாரமலர்
கவிதைப் போட்டி
88/14, சோமாதேவிபிளேஸ்,
கொழும்பு-5.

தினமுரசு வாரமலர்
மாணவர் முரசு
88/14, சோமாதேவிபிளேஸ்,
கொழும்பு-5.

தினமுரசு வாரமலர்
வாசகசாலை
88/14, சோமாதேவிபிளேஸ்,
கொழும்பு-5.

தினமுரசு வாரமலர்
புகார் பெட்டி
88/14, சோமாதேவிபிளேஸ்,
கொழும்பு-5.

தினமுரசு வாரமலர்
சிந்தியா பதில்கள்
88/14, சோமாதேவிபிளேஸ்,
கொழும்பு-5.

## நாளை வானம்

நா.காமராசன் தமிழ் இலக்கிய உலகம் அறிந்த கவிஞர். தமிழ்த் திரைப்படப்பாடல்கள் மூலமாக தமிழ்பேசும் மக்கள் அனைவருக்கும் பரிச்சயமானவர். தினமுரசிற்காக கவிதை ஒன்று கேட்க, மறுப்பில்லாமல் தன் உணர்வுகளைப் பதிய வைத்துத் தந்துள்ளார்.

கவியரசு நா. காமராசன்

சோகம் பாடும் ஒரு வானம் பாடி
சொர்க்கம் தேடிப் போனது.
காலகாலமாக வந்த
காதல் கீதம் வேதம் ஆனது.

பாதம் ஓரிடமும்
பார்வை வேறிடமும்
ஆசை நூறிடமும்
ஆடி அலைந்து ஓய்ந்து போனது.

நேசக் கவிதைகள் ஆயிரமும்
நீசக் கதைகள் பல்லாயிரமும்
மாறி மாறி வந்து
மனத் தேரில் ஏறுது - என்
மானசீகம் சேதமானது - ஒரு
மௌன தேசம் சாய்ந்து போனது.

வேதம் பாடிய காலம் வீணென -என்
வீணை இங்கே ஏங்குது.
ஊமையானதே நீலப் பூங்குயில்
வசந்த காலம் தூங்குது.

தோளில் பாரமும், நெஞ்சில் காயமும்
சுமந்து எங்கோ போகிறேன்
நாளை வானத்தின் உதய காலத்தில்
நண்பர்களைக் காணுவேன்.







நன்றி மதன் ஜோக்ஸ்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# பிரேமதாசவின் அணுகுமுறைகளே தொடரும்! புதிய ஜனாதிபதி குறித்துப் புலிகள் கருத்து!!

**இலங்கையின் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலைக்கு தாங்கள் பொறுப்பல்ல என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பாரிஸ் கிளையினர் மறுப்புத் தெரிவித்திருந்தனர். பாரிசில் உள்ள புலிகளின் முக்கியஸ்தரான திரு. லோரன்ஸ் திலகர் இலண்டன் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் லலித் அத்துலத் முதலி கொலை, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச கொலை ஆகியவற்றோடு தமது இயக்கத்தைத் தொடர்புபடுத்துவதைச் சற்றுக் காரமான தொனியில் மறுத்திருந்தார்.**

இரு கொலைகளுக்கும் பொறுப்பல்ல என்று வெளிவந்த அறிக்கைகள் வெளிநாடு ஒன்றிலிருந்தே வெளிவந்திருக்கின்றன என்பதை கவனிக்க வேண்டும்.



யாழ்ப்பாணத்தில் இருக்கும் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனோ அல்லது அங்குள்ள வேறு முக்கியஸ்தர்களோ இதுவரை மறுப்பும் ஏற்கவில்லை. அதே சமயத்தில் இரு கொலைகளில் எதற்கும் சிறு கண்டனம்கூட அவர்களால் தெரிவிக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் குரல் வானொலி வெளியிட்ட செய்திகள் கொழும்பில் நடைபெறும் சம்பவங்களைக் கூறுவதாக இருந்ததே தவிர எவ்விதமான விமர்சனங்களையும் வெளியிடவில்லை.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசவுக்கும், விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையே வெளியே தெரியாத இணக்கமொன்று இருந்து வருவதாக முன்னர் கருதப்பட்டது. குறிப்பாக அமரர் பிரேமதாசவின் அரசியல் எதிரிகள் அதனைச் சற்று உரக்கவே கூறிக் கொண்டிருந்தார்கள்.

அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்னாள் ஜனாதிபதியின் படுகொலை மூலம் போலியாக்கப்பட்டுள்ளன. பிரேமதாசாவின் கொலைக்குச் சிறு அனுதாபத்தைக் கூட வெளிப்படுத்தாத நிலையில் புலிகள் தமது வெறுப்பை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க புலிகளோடு பேசுவதற்குத் தயாராக இருப்பதாக கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கும்போது தெரிவித்திருந்தார்.


அதனை அடுத்துப் பல்வேறு ஊகங்கள், கணிப்புக்கள் வெளியிடப்பட்டன. ஆனால் இவற்றிற்கெல்லாம் அப்பால் யாழ்ப்பாணத்தில் புலிகளின் குரல் இயக்கத்தின் கருத்தை வெளியிட்டிருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் அணுகுமுறைகளே தொடரும். மாற்றம் இருக்காது என்பது தான் புலிகளின் கருத்து. அதன் மூலம் நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள் என்றுதான் கருதப்படுகிறது. மற்றொன்று தென் இலங்கைத் தலைவர்கள் எவருக்குமே தமிழர்கள் மத்தியில் செல்வாக்கு ஏற்படுவதை விடுதலைப் புலிகள் விரும்பமாட்டார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் இனப்பிரச்சினைத் தீர்விற்கான முயற்சிகள் எவ்வாறு முன்னெடுக்கப்படப்போகின்றன என்பதே அரசியல் அவதானிகளாலும் பதில் சொல்ல முடியாத கேள்வி ஆகும்.

பந்தி பந்தியாக எழுதப்படும் விமர்சனங்கள், அப்படி இருக்குமோ? இப்படி இருக்குமோ? என்ற ஊகங்கள் அனைத்தையும் தமது ஒரு நடவடிக்கை மூலம் தலை கீழாக்கி விடுபவர்கள் புலிகள்.

இலங்கையின் சகல தளங்களிலும் தாக்கம் செலுத்தக் கூடிய



பலம் புலிகளிடம் இருக்கிறது.

தென் இலங்கையின் புதிய தலைமைத்துவம் நிலைமைகளை எவ்வாறு சமாளிக்கப்போகிறது? ஜனாதிபதியும் பிரதமரும் நீண்ட கால யுத்தத்தால் சலிப்படைந்துள்ள நாட்டு மக்களுக்கு எவ்வாறான தீர்வினை முன்வைக்கப் போகிறார்கள்? அடுத்த தேர்தலை பற்றிய சிந்தனையைவிட அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திக்கின்ற கருத்தொருமிப்பு ஏற்படுமா?

இந்த வினாக்களுக்கான விடையில் தான் நமது தாய் நாட்டின் தலைவிதி தங்கி இருக்கிறது.

## 6000 விதவைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போதைய யுத்தம் காரணமாக 6000 இளம் பெண்கள் தமது கணவன்மாரை இழந்துள்ளனர். இதில் எண்பது வீதமான பெண்கள் 17-25 வயதிற்குட்பட்டவர்கள்.

## செந்தமிழை கற்றுக்கொள்ள சிங்கள மாணவர்கள் ஆர்வம்

தென்னிலங்கையில், குறிப்பாக காலி மாவட்டத்தில் சிங்கள மாணவர்களும், அரசாங்க ஊழியர்களும் தமிழ் மொழியை ஆர்வத்துடன் கற்று வருகிறார்கள்.

காலி மாவட்டத்திலுள்ள சிங்களப் பாடசாலை அதிபர்களே துந்துவை-பலபிட்டி-பனாப்பிட்டி-சிந்தோட்டை-காலி ஆகிய முஸ்லிம் ஊர்களுக்கே முஸ்லிம்களைத் தேடிவந்து சிங்கள மொழி மூலம் தமிழைக் கற்றுக் கொடுக்க ஆர்வமுள்ளவர்களை பாடசாலைகளுக்கு தொண்டர் ஆசிரியர்களாக சேர்த்து வருகின்றனர்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 'திரி பாஷை' கேள்விகள் வரும் என்பதாலும், சிங்கள அரசாங்க ஊழியர்கள் தமிழில் அறிவு பெற வேண்டுமென அரசு ஊக்குவிப்பதாலும், தென்னிலங்கையில் சிங்கள மக்களிடையே தமிழ் படிக்கும் மோகம் அதிகரித்து வருகிறது எனக் கூறப்படுகிறது.

(பலப்பிட்டிய அரூஸ்)

## பஸ் வண்டி நிற்காத பஸ் நிலையம்

பலப்பிட்டி பஸ் நிலையத்தில் பஸ் வண்டிகள் நிறுத்தப்படுவதில்லை. பஸ் நிலையத்தில் பிரயாணிகள் காத்து நின்றால் ஏமாற்றமே. பாதையில் காத்திருப்போர் முண்டியடித்துக் கொண்டு ஏறுகிறார்கள். பஸ் நிலையத்தில் காத்திருப்போர் ஏமாற்றம் அடைகின்றனர்.

பஸ் நிலையத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலையும் மூடப்பட்டுள்ளது.

(பலப்பிட்டிய அரூஸ்)

## நட்டத்தில் பறந்த எயர் லங்கா

எயர் லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சபை மாற்றப்பட்டிருக்கிறது. ஜெனரல் ஆட்டிக்கல அதன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அமரர் பிரேமதாசவின் மறைவை அடுத்து புதிய ஜனாதிபதியால் எயர் லங்காவிற்கான புதிய தலைவர் நியமிக்கப்பட்டார். மறைந்த ஜனாதிபதிக்கும் பழைய பணிப்பாளர் சபை மீது அதிருப்தி இருந்ததாகச் சொல்கிறார்கள். ஏதோ சில காரணங்களால் மாற்றத்தை ஏற்படுத்துவதை அவரால் உடனடியாகச் செய்ய முடியவில்லை. மறைந்த ஜனாதிபதி நினைத்திருந்ததை புதிய ஜனாதிபதி நிறைவேற்றியுள்ளார்.

புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஜெனரல் ஆட்டிக்கல சிறந்த நிர்வாகி என்று முன்னரே பெயர் எடுத்தவர். அவரது பதவிக்காலத்தில் எயர் லங்கா இலாபத்தில் பறக்கட்டும்.

## காதல் தகராறு கொலையில் முடிந்தது! மற்றும் இரு மரணதண்டனைகள்!!

(யாழ் நிருபர் வர்மா)

இம்மாதம் ஒன்பதாம் திகதி யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் இருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த நடராஜா தயானந்தம் அல்லது காளிதாஸ், கொக்குவிலைச் சேர்ந்த குகநேசன் அல்லது குகன் ஆகிய இருவருக்குமே மரண தண்டனை விதிக்கப்பட்டது. காதல் தகராறு காரணமாக தாவடியைச் சேர்ந்த நவரட்ணராஜா சுதர்ஸன் என்பவரை இவர்கள் இருவரும் திட்டமிட்டுக் கொலை செய்தனர் என்று கூறப்படுகிறது. இவர்கள் இருவருக்கும் மரண தண்டனை விதித்த புலிகள் அறிக்கையொன்றினை வெளியிட்டனர். அதில் கூறப்பட்டிருப்பதாவது,

கடந்த வருடம் ஜனவரி மாதம் 5ம் திகதி நவரட்ணராஜா சுதர்ஸன் என்பவரைக் குகனது வீட்டிற்குத் தயானந்தம் அழைத்துச் சென்றார். அங்கு வைத்துச் சுதர்ஸனை தயானந்தமும், குகனும் அடித்தே கொலை செய்தனர்.

பின்னர் கொலையுண்டவரின் உடலை ஸ்கூட்டர் ஒன்றில் வைத்து தயானந்தமும், குகனும் மயானத்திற்குக் கொண்டு சென்றனர். இறந்தது தெரியாமல் இருக்க உடலுக்கு மழைக் கவசம் அணிவித்து ஸ்கூட்டரில் இருவருக்கும் இடையில் வைத்துப் பிணம் கொண்டு செல்லப்பட்டது. பிணத்தை நாவற்குழி மயானத்தில் புதைத்தனர்.

மயானத்தில் விறகு வெட்டச் சென்ற பொதுமகன் ஒருவர் பிணத்தைக் கண்டு விட்டுப் புலிகளுக்குத் தெரிவித்தார். கொலை பற்றி விசாரித்த புலிகள் கொலையாளிகள் இருவருக்கும் மரணதண்டனை விதித்துள்ளனர்.

கொலைக்கான காரணமென்ன? நடராஜா தயானந்தம் கோண்டாவிலில் வசித்து வந்த பெண் ஒருவர் மீது மையல் கொண்டார். ஆனால் அப்பெண்ணோ கொலையுண்டவரான சுதர்ஸனைக் காதலித்தாள். கோபம் கொண்ட தயானந்தம் சுதர்ஸனைக் கொன்றுவிட்டார். கொலையாளியான தயானந்தம் தமது இயக்கத்தில் முன்னர் இருந்து பின்னர் விலகியவர் என்று புலிகள் கூறியுள்ளனர்.

நடராஜா தயானந்தம் கோண்டாவில் சந்தியில் வைத்தும், சிவகுருநாதன் குகநேசன் தாவடிச் சந்தியில் வைத்தும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## யாழ்ப்பாணத்தில் மனநோயாளர்கள்

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் கோரிக்கையை ஏற்று நோர்வே வைத்திய நிபுணர் ஒருவர் யாழ்ப்பாணம் சென்றுள்ளார். தற்போதைய யுத்தத்தால் மனநோயாளர்களின் தொகை யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்த பிரபலமான வைத்திய நிபுணர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். இதனால் மனநோயார்களுக்கு சிகிச்சை அளிக்கவும் வைத்தியர்கள் இல்லை.

யாழ்ப்பாணத்திலுள்ள அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் நோர்வேயில் உள்ள வைத்திய நிபுணர் ஒருவரை இப்போது யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்துள்ளன. மனநோயாளர்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் அவர் தேர்ச்சி பெற்றவர் என்று கூறப்படுகிறது. அவர் மூன்று மாதங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து சேவை யாற்றவுள்ளார். ■

## கருத்துக் கணிப்பு

தமிழர்களின் அபிலாசைகளை அறிந்துகொள்வதற்கு வடக்கு கிழக்கு மாகாணத்தில் கருத்துக் கணிப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும். இவ்வாறு பாரீசிலுள்ள புலிகள் இயக்கப் பிரமுகர் லோரன்ஸ் திலகர் தெரிவித்துள்ளார். ■

## குண்டு வீச்சுக்கள்

இம்மாத நடுப்பகுதியில் வடக்கே இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சுக்களால் பொது மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். கிளாலி, பொன்னாலை, சுளிபுரம் போன்ற பகுதிகளில் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

விமானக் குண்டு வீச்சுக்களாலும், ஷெல் தாக்குதல்களாலும் புலிகள் அமைப்பினர் பாதிக்கப்படுவது மிக அரிதாகவே நடக்கிறது. புலிகளின் முகாம்கள் அப்படியே இருக்கும் போது, அந்த முகாம்களைச் சுற்றி இருக்கும் வீடுகள் பாதிக்கப்படும் சம்பவங்கள் இடம் பெறுவதும் உண்டு.

யாழ்ப்பாணத்தில் விமானக் குண்டு வீச்சுக்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன என்று அங்குள்ள மக்கள் வேடிக்கையாகப் பேசிக் கொள்கிறார்கள். ஒரு வழி, பங்கர்களுக்குள் இருப்பது. இரண்டாவது வழி புலிகளின் முகாம்களுக்குள் சென்றுவிடுவது. ■

## ஆயர் குழு யாழ் செல்லும்?

அங்கலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் வணக்கத்திற்குரிய கெனத் பெர்னாண்டோ தலைமையிலான மதகுருமார்கள் குழுவினர் மீண்டும் யாழ்ப்பாணம் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இம்முறை பௌத்த மதகுருமார்கள் சிலரையும் தம்மோடு அழைத்துச் செல்ல அவர்கள் முயன்று வருகின்றனர்.

அரசாங்க தரப்பினர் சிலரை கொழும்பு ஆயர் சந்தித்துள்ளதாகவும் மீண்டும் யாழ் செல்லும் தனது நோக்கம் பற்றி எடுத்துக் கூறியதாகவும் அறியப்படுகிறது. ■

## மன்னார் ஆயர் கோரிக்கை

வடபகுதிக்கான பொருளாதாரத் தடையை நீக்க வேண்டுமென்று மன்னார் ஆயர் கோரிக்கை விடுத்துள்ளார். தனது கோரிக்கை குறித்து அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ■

# செல்வியின் ஆட்சி கவிழுமா?

## காத்திருக்கிறது தி.மு.க.

(தமிழக நிருபர் ஏழுமலை)

தமிழ்நாட்டில் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பக்கமாக வீசிய ஆதரவு அலை இப்போது குறைந்து வருவதாக இந்தியப் பத்திரிகைகள் அடித்துச் சொல்லுகின்றன.





செல்வி ஜெயலலிதாவின் முடிவுகள் தன்னம்பிக்கையை வெளிப்படுத்துவதாகச் சில விமர்சகர்கள் கூறுகின்றனர். ஆனால் தன்னம்பிக்கை என்பது வேறு. தன் அகங்காரம் என்பது வேறு. செல்வியிடம் இருப்பது தன் அகங்காரம் என்கிறார்கள் வேறு சில விமர்சகர்கள்.

இந்தியாவின் மத்திய ஆளும் கட்சியான காங்கிரசோடு செல்வி ஜெயலலிதாவும் அவரது கட்சியினரும் தொடுத்து வரும் யுத்தம் ஆட்சிக் கவிழ்ப்புக்கு எந்த நேரத்திலும் வழிவகுக்கக் கூடுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவை இழக்க விரும்பவில்லை என்றே தெரிகிறது.

செல்வி ஜெயலலிதா ஒரு பிராமணர். அதுதான் பிரதமர் ஆதரவு காட்டுகின்றார் என்று தி.மு.க. தலைவர்களில் ஒருவரரான திரு. ஆலடி அருணா கூறியுள்ளார்.

ஆட்சி கவிழ்ந்தால் கோட்டையைப் பிடிக்கும் கனவோடு தி.மு.க. காத்திருக்கிறது. இப்போது கூட ஒன்றும் கெட்டு விடவில்லை. முதல்வர் ஜெயலலிதா கொஞ்சம் புத்தி



சாலித் தனமாக நடந்து கொண்டால் மீண்டும் காங்கிரசோடு தேன்நிலவு ஆரம்பமாகும்.

# பூநகரிப்பாதை விவகாரம் தொடரும் முயற்சிகள்

யாழ்ப்பாண மக்களின் போக்குவரத்து அவலங்கள் பூநகரிப்பாதை திறப்பின் மூலம் தீர்வதற்கான சாத்தியங்கள் உண்டு. யூ.என்.எச்.சி.ஆர். அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி டொக்டர் பீற்றர் நிக்கலஸ் மீண்டும் யாழ்ப்பாணம் செல்ல இருக்கிறார். பூநகரிப் பாதை விடயம் தொடர்பாகப் புலிகளோடு பேசுவதற்காக ஏற்கனவே இரண்டு தடவைகள் அவர் யாழ்ப்பாணம் சென்றார்.

பூநகரிப்பாதை விடயத்தில் அரசும் புலிகளும் ஒரு பொது உடன்பாட்டிற்கு முன்வரும் பட்சத்தில், அந்த உடன்பாடு மீறப்படாத வகையில் யூ.என்.எச்.சி.ஆர். பார்த்துக் கொள்ளும் என்று கூறப்படுகிறது.

உடனடியாகப் பூநகரிப் பாதையூடான பொதுமக்களின் போக்குவரத்திற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவிக்கமாட்டார்கள். முதலில் தொண்டர் நிறுவனங்களின் வாகனங்களும் நோயாளர்களும் அப்பாதை வழியாகப் பயணம் செய்வதற்குப் புலிகள் இணங்கலாம் என்றே கருதப்படுகிறது.

## ஏன் இந்தப் பாராமுகம்?

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் மாணவர்கள் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி மாதங்கள் பல கடந்து விட்டன. இன்று வரை சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கு புதிய பாடசாலைகளில் அனுமதி கிடைக்கவில்லை என்று புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

தங்கள் குழந்தைகளுக்குப் புதிய பாடசாலைகளில் இடம் கிடைக்காமை குறித்துப் பெற்றோர்கள் பலர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இதே வேளையில் சிங்கள மொழி மூலம் பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்த மாணவர்களுக்கு அனுமதி கிடைத்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

நிவர்த்தி செய்யக்கூடிய பொறுப்புகளில் உள்ளவர்கள் இதைக் கொஞ்சம் கவனித்தால் என்ன?

-ஐ.ஏ.ரஸாத்-

## வெளிச்சம் வருகிறது

1995ம் ஆண்டு இறுதிக்குள் குருநாகல் மாவட்டத்திலுள்ள சகல தமிழ், முஸ்லிம் கிராமங்களுக்கும் மின்சாரம் பெற்றுக்கொடுக்க வடமேல் மாகாணசபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் வடமேல் மாகாணத்தில் உல்லாசப் பிரயாணத்துறை விவசாயம், கைத் தொழில் உட்பட மற்றும் பல துறைகளில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கு ஜப்பான், சீனா, இந்தோனேசியா உட்பட பத்து நாடுகள் உதவ முன்வந்துள்ளன.

குருநாகல், புத்தளம், கற்பிட்டி போன்ற இடங்களில் உல்லாசப் பிரயாணத்துறை விடுதிகள் நிறுவப் படவுள்ளன.

-விசி நவ உதுமான்-

## ஆசிரியர்களைத் தேடுகிறார்கள்

கம்பஹா மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இதனால் இம்மாவட்டத்திலுள்ள தமிழ், முஸ்லிம் மாணவர்களின் கல்வித்தரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அம்மாவட்டத்தைச் சேர்ந்த பலர் குறைபட்டுக் கொள்கின்றனர்.

பல பாடசாலைகளில் உயர் வகுப்புக்களுக்கான கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் போன்ற பாடங்களைப் போதிப்பதற்கு அசிரியர்கள் இல்லாத நிலமை. அதனால் மாணவ, மாணவிகள் பெரிதும் கவலை அடைந்திருக்கின்றனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் பலர் முக்கிய பாடங்களை முறைப்படி கற்க முடியவில்லை என்று வருத்தப் பட்டனர்.

எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரணப் பரீட்சையிலும் அந்த அவல நிலை தொடருமமா என்று பெற்றோர்கள் பலர் அங்கலாய்க்கின்றனர். -எம்.எச்.எம்.காரித்-

## புதிய நூல் இது பொருளியலில் ஆறு விடயங்கள்

கலை வர்த்தக உயர்தர மாணவர்களுக்கு உதவுகின்ற விதத்தில் பொருளியலில் ஆறு விடயங்கள் என்னும் நூல் வெளிவர இருக்கிறது. அதனை ஆக்கியருப்பவர் ஜனாப் எம்.ஐ. ஜாபீர். (கொழும்பு பல்கலைக்கழகம்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியும், பேருவளை அல் ஹுமைஸரா மத்திய கல்லூரியும் இணைந்து வெளியிடும் இந்த நூல் இம்மாத இறுதியில் வெளிவர இருக்கிறது.

மு. நூகா

# பெற்றால் தான் பிள்ளையா?

-எம்.என்.நஸீர்-

வீட்டு வேலையாட்களாகப் பணியாற்றும் யுவதிகளின் சோகக் கதைகள் பற்றி அதிகமான செய்திகள் வருவதுண்டு.

வீட்டு எஜமானரின் அல்லது எஜமானியின் கொடுமைகள் தாங்காமல் சொல்லாமல் கொள்ளாமல் வேலையைவிட்டு ஓடும் சம்பவங்களைப் பற்றியும் அறிந்திருக்கிறோம்.

அவற்றிலிருந்து வித்தியாசமான ஒரு சம்பவம் மாத்தறையில் நடந்திருக்கிறது.

வீட்டு வேலைக்கான பணிப்பெண்ணாக இருந்து வந்தாள் இளம் யுவதி ஒருத்தி. அவள் கம்புறுப்பிட்டியாவைச் சேர்ந்தவள்.

அவளது தாயாரின் பெயர் சந்திரசீலி விஜேசேகே. வறுமையின் காரணமாகத் தனது மகளை மாத்தறையிலுள்ள வீடொன்றில் வேலையில் சேர்த்து விட்டார். அது நடந்தது பத்து வருடங்களுக்கு முன்னர்.

வறுமையின் காரணமாக மகளை வேலைக்குச் சேர்த்து விட்ட போதும், அவளுக்குத் திருமணம் செய்து பார்க்க வேண்டுமென்று அந்தத் தாய் மனது தவித்தது. மகளுக்கோ வயது 21. காலா காலத்தில் கலியாணம் செய்து வைக்கக் கையோடு அழைத்துச் செல்லும் எண்ணத்தில் தனது மகள் வேலை செய்யும் இடத்திற்கு அந்தத்தாய் வந்தாள்.

ஆனால் தாயோடு செல்ல மகள் விரும்பவில்லை. தனது எஜமானி தன்னையும் ஒரு பிள்ளை போல் கவனிப்பதாகக் கூறிய அந்த யுவதி தாயோடு செல்ல மறுத்து விட்டாள்.

எப்படியோ வற்புறுத்தி அந்தத் தாயார் தன்னுடன் மகளை அழைத்துச் சென்றாள். அழுது புலம்பியபடி தாயோடு சிறிது தூரம் சென்ற அந்த யுவதி திடீரென்று இடைநடுவில் தான் வேலை செய்த வீடு நோக்கித் திரும்பி ஓடி வந்து விட்டாள்.

தனது மகள் எஜமானி மீது கொண்ட பாசத்தைக் கண்ட அந்தத் தாய் அவள் தனது எஜமானியோடு இருக்கட்டும் என்று கூறி விட்டு வீடு திரும்பினார்.

# கிண்ணியாவில் மாணவிகள் போராட்டம்

-ஏ.எம். அப்துல் பரீட்-



கிண்ணியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலய மாணவிகள் அண்மையில் போராட்டம் ஒன்றினை நடாத்தினார்கள். ஏனிந்த போராட்டம்? தமது வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குமாறு பல முறை கோரிக்கை விட்டுப் பார்த்தார்கள். விழ வேண்டியவர்கள் செவிகளில் அது விழுந்ததாகத் தெரியவில்லை. அதனால் போராட்டம் ஒன்றினை நடத்த வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

ஜனாப் எம்.பி. முகைதீனும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். -அலியார் முசம்மில்-

# மத்திய முகாம் பாடசாலையில் நித்திய கவலை

சம்மாந்துறை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த மத்திய முகாம் முஸ்லிம் பாடசாலையின் அவல நிலையை நினைத்து இப்பகுதியில் வாழும்மக்கள் பெரிதும் நம்பிக்கை இழந்துள்ளனர். குடியேற்றப்பகுதியில் வளர்ந்து வரும் கிராமங்களில் ஏனைய கிராமங்களை விட மத்திய முகாம் சிறந்து விளங்குகிறது.

கடந்த சில ஆண்டுகளாக இடம்பெற்ற வன்செயல்களில் மத்திய முகாமும் பாதிக்கப் பட்டது. ஆயினும் அதனைப் பொருட்படுத்தாது அக்கிராம மக்கள் வளர்ச்சிப் பணிகளில் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

மத்திய முகாம் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் துணை புரிந்து வரும் மத்திய முகாம் முஸ்லிம் பாடசாலையில் உயர் வகுப்புக்கள் கிடையாது.

1972ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு கட்டடம் பல இடிபாடுகள் மத்தியில் காணப் படுகிறது. இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் அந்த இடிபாடுகள் மத்தியிலும், மற்றும் மரங்களின் நிழலிலும் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

உரிய இடங்களில் முறையிட்டும்கூட இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இன்றுவரை எவ்வித திருத்தமோ நடைபெறாமல் இருப்பது ஏனோ தெரியவில்லை, என்று கவலையோடு சொன்னார் அங்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்.

இடர்பாடுகள், மத்தியில் அப்பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியர்களும், அதிபர்

**90 கோடி**

இந்தியாவின் மக்கள் தொகை இந்த ஆண்டிற்குள் 90 கோடியாக உயரும் என்று குடிசனத்துறை ஆய்வுக்கான அமெரிக்க தனியார் நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# அதிரடி அய்யாத்துரை



**ஆ**ளுங் கட்சியின் செயலாளர் தனது நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்தார். தலைவரது படுகொலைக்குப் பின்னர் அவ ரது பாதுகாப்பும் மெருகூட்டப்பட்டிருந்தது. மெய்க் காவலர்களும் விழிப்பை உயர்த்தியிருக்கிறார்கள். அப்படியிருக்கும் போதும் நாம் மெல்லக் காதை நீட்டினோம். அவரது நண்பர்கள் முக்கியமான பதவியொன்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவரிடம் கூறிக் கொண்டிருந்தார்கள். அதற்கு ஒரு மெல்லிய புன்னகையோடு அவர் சொன்னதாவது: "நான் பணிகளைத் தான் விரும்புகிறேன். பதவிகளை அல்ல". ஆச்சரியமான மனிதர்.

**ந**மது நண்பருக்கொரு சந்தேகம். பாராளும் சபையின் நடுவர், வீட்டிலும் நடுவராகத் தான் இருப்பாரோ என்பது அந்தச் சந்தேகம். தந்தை ஒரு புறம். தனயன் மறுபுறம். இல்லத்திலும் ஜனநாயகம் இருக்கிறது.

**வெ**ளியுலகில் நடிகர்கள் சிலர் நாடாளும் தகுதியைப் பெற்று விட்டதால் நம்மூர் நடிகர்களுக்கும் வந்தது ஆசை. நமது நாட்டிலுள்ள வானொலி நடிகர்கள் சிலர் வாக்குத்தேடிப் புறப்பட்டிருக்கிறார்கள். நடித்த நாடகங்களையும் பட்டியல் போட்டுக் கூறுகிறார்கள். (தமது நடிப்பு நினைவில் நிற்காதென்ற நம்பிக்கையோ?) எப்படியோ, கட்டுக்காசு பறிபோகும் சிஸ்டம் இல்லாமல் போனது பலருக்கு வசதி.

**தே**ர்தலுக்கு முன்னர் பச்சை அணியோடு சேர்ந்தவர்அவர். இந்தியப் பெருந்தலைவரின் பெயரில் பாதியைத் தனது பெயரின் பாதியாகக் கொண்டவர். அவர் தலைவரின் படுகொலையைக் காரசாரமாகக் கண்டிக்க வில்லை என்பது சில வட்டாரங்களில் விழிப்புருவங்களை உயர்த்த வைத்திருக்கிறதாம். அதுமட்டுமல்ல இணைந்த கையோடு அவருக்கு சீற் கொடுக்கப்பட்டதில் அக்கட்சியிலுள்ள தமிழர்கள் சிலருக்கே அதிருப்தி உண்டு என்றும் கதைக்கிறார்கள்.

**ஒ**துங்கிச் சென்ற தலைவரை மீண்டும் அரசியல் அரங்கிற்குக் கொண்டு வரச் சிலர் ஒற்றைக் காலில் நின்றதாகத் தகவல். ஆனால் முன்னாள் தலைவர் தனது இறுதிக்காலத்தை இரைச்சல்கள் மத்தியில் கழிக்க விரும்ப வில்லையாம். தற்போதைய தலைமையில் நம்பிக்கையற்ற சிலர்தான் முயற்சியில் முனைப்புக்காட்டினார்களாம்.

**அ**ரசியல்வாதிகள் சிலர் பாதுகாப்புப் படையினரைத் தொலைபேசிகளால் தொல்லைப்படுத்துகிறார்களாம். அந்த விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகள் சிலருக்கு முக்கிய பங்கு இருக்கிறதாம். அவர்களது தொல்லையால் இரண்டெழுத்துச் சந்தேக நபர்கள் கூட விடுபட்டுச் செல்வதாகச் சிலர் குறைபட்டுக்கொள்கிறார்கள்.

**ந**ம்மூர்த் தொலைக் காட்சியில் காட்டப்படுகின்ற திரைப்படங்களில் சில தொல்பொருள் ரகத்தில் வந்து தொல்லைப் படுத்துவதாக ஒரு குறை உண்டு. தவிர வைக்கக் கூடாத இடங்களில் கத்தரிக்கோலை வைத்து விடுவதால் திரைப் படத்தின் விறுவிறுப்பும் போய்விடுகிறதாம். பொறுப்பில் உள்ளவர்கள் கொஞ்சம் கவனித்துக் கொண்டால் நல்லது. தொலைக்காட்சித் தமிழ் பிரிவினரின் அலட்சியமும் சில நேரங்களில் எரிச்சல்படுத்துகிறது. தமிழுக்கு அதிக நேரம் கேட்பது ஒரு புறமிருக்க, உள்ள நேரத்தையாவது ஒழுங்காகப் பயன்படுத்திக் கொண்டால் என்ன?

**தெ**ன் ஆசியா பெண்களின் உலகமாகி வருகிறது. முன்னர் அம்மையார் இலங்கையின் பிரதமராக இருந்தார். பிறகு இந்தியாவும் இந்திராவைப் பிரதமர் ஆக்கியது. பாகிஸ்தானும் விட்டுக் கொடுக்கவில்லை. பூட்டோவின் புதல்வியிடம் பிரதமர் பதவியைக் கொடுத்தது. விட்டேனா பார் என்று பங்களாதேஷ் பேகம் காலிதா ஸியாவைப் பிரதமராக்கியது. இப்போது இலங்கையில் மேலும் ஒரு பெண்மணி அரசியலில் குதித்திருக்கிறார். மற்றொருவர் குதிக்கலாம் என்று பேசப்படுகிறது. அதற்கான முயற்சியில் முக்கியமான சிலர் முயன்று கொண்டிருப்பதாகவும் காற்று வாக்கில் ஒரு செய்தி வந்து காதில் விழுந்தது. அதுமட்டுமில்லை பதவி தேடிச் சென்றபோது வேண்டாமென்று முகத்தைத் திருப்பிக் கொண்ட சோனியாவும் அரசியலுக்குச் சென்றால் என்னஎன்று யோசித்துக் கொண்டிருப்பதாக ஒரு தகவல். என்றாலும் ஒரு குறை, பெண்கள் பலர் அரசியலுக்கு வந்தும் கூட தென் ஆசியப் பெண்களின் நிலையில் பெரிய முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டு விடவில்லையுங்கோ.

**தே**ர்தல் முடிவுகள் வெளியாகத் தொடங்கியதும் தனித்துவமான சிறுபான்மை அரசியல் வட்டாரத்தில் உச்சி மீது வான் இடிந்து விழுந்தது போன்ற அதிர்ச்சியாம். ஒரு தொகுதியில் விழுந்த புள்ளடிகள் 26. வேட்பாளர்களின் குடும்பத்தினர் கூட புள்ளடி போடாமல் பொல்லடி வழங்கி விட்டார்களாக்கும்.

**பி**ரச்சார முறையில் கழுகு அணியினர் வெளுத்து வாங்குவதை தென் பகுதியில் உள்ள தெருச் சுவர்கள் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. பச்சை அணியினர் மாகாணத் தேர்தல்க்ளின் பிரச்சாரத்தில் கோட்டை விட்டது உண்மைதானாம். அதுதான் ஒரு கோட்டையை விட்டார்களோ? பதவியில் உள்ள கட்சிகளின் பிரச்சாரங்களில் சூடும் சுவையும் இல்லாமல் போவது பொது விதியாகி விட்டது. ஏன் என்று ஆராய வேண்டும்.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

—நாரதர்—

## தலைநகர நிலவரம்

இலங்கையின் தலைநகரம் பாதுகாப்பு அற்றதாகி இருக்கிறது. அடுத்தடுத்து நடைபெற்ற அரசியல் தலைவர்கள் இருவரது படுகொலைகள் தலைநகரின் பாதுகாப்புக் குறித்து பல கேள்விகளை எழுப்பியுள்ளன.

நாட்டின் முதல் குடிமகனான ஜனாதிபதியைப் பாதுகாக்க முடியாதவர்கள் என்கின்ற குற்றச் சாட்டு சட்டம், ஒழுங்கு மற்றும் பாதுகாப்புக்களுக்குப் பொறுப்பான அமைப்புக்களை நோக்கி வீசப்பட்டிருக்கிறது.

டீ.யூ.என்.எவ். தலைவர் லலித் அத்துலத் முதலி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டபோது அவரது கட்சியினர் காலஞ்சென்ற ஜனாதிபதியின் மீது குற்றம் சாட்டினார்கள். அது தீவிரமான பிரச்சாரமாகவே முன்னெடுக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அது பற்றிக் குறிப்பிடும்போது, லலித் கொலைக்கு பிரேமதாசதான் காரணமோ என்று நாமே சந்தேகிக்கும் வகையில் அவர்கள் பிரச்சாரம் செய்தனர் என்று கூறி இருந்தார். அதன்மூலம் அந்தப் பிரச்சாரத்தின் தீவிரத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

யாழ்ப்பாணம் அராலித் துறையில் மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ உட்பட பாதுகாப்புப் படை அதிகாரிகள் கடந்த வருடம் கொல்லப்பட்டபோது, அதற்கும் காலஞ்சென்ற ஜனாதிபதி மீதே எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டினார்கள்.



ஆயினும் அந்தக் குற்றச் சாட்டு லலித் கொலை விவகாரத்தில் குற்றம் சாட்டப்பட்டதைப் போல விசுவரூபம் எடுக்கவில்லை.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான லலித் அத்துலத் முதலி சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குள்ளவராக இருந்தமையும், தேர்தல் சமயத்தில் அவர் கொல்லப்பட்டதும், அதனைப் பயன்படுத்தி வாக்குகளை அறுவடை செய்து கொள்வதற்கான டி.யூ.என்.எவ். தலைமைத்துவத்தின் விவேகமான செயற்பாடுகளும் காலஞ்சென்ற ஜனாதிபதிக்குப் புதிய சுவாலைத் தோற்றுவித்தது.

ஜனாதிபதி பிரேமதாச கொல்லப்படாமல் இருந்திருந்தால் விசுவரூபமாக உருவெடுத்த குற்றச் சாட்டின் விளைவுகளைக் கணிப்பிடக் கூடியதாக இருந்திருக்கும்.

ஜனாதிபதி பிரேமதாசவின் படுகொலையோடு லலித் அத்துலத் முதலியின் கொலைக்கு பிரேமதாசவே காரணம் என்ற குற்றச்சாட்டு வலுவிழந்தது.


காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாச உயிரோடு இருந்தபோது அவர் மீது கடுமையான குற்றச் சாட்டுக்களைச் சுமத்திய பத்திரிகைகளில் ஒன்று ராவய(சூசகம்).

அந்தப் பத்திரிகை 14/05/93 அன்று ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளது. அதில் ஜனாதிபதி பிரேமதாச, லலித் அத்துலத் முதலி ஆகிய இருவரையும் கொலை செய்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பகுதியினரே என்று குறிப்பிட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல் காலஞ்சென்ற ஜனாதிபதி தம்மைக் குறுக்கு வழியில் சம்பாதிக்க விடவில்லை என்ற கோபத்தில் அவரது கட்சியில் ஒரு பகுதியினர் கொலை செய்யத் துணிந்தனர் என்றும் கூறி இருக்கிறது.

அப்படிக் கூறி இருப்பதன் மூலம் ஜனாதிபதி பிரேமதாச

**ஜனாதிபதி பிரேமதாசவின் படுகொலையோடு லலித் அத்துலத் முதலியின் கொலைக்கு பிரேமதாசவே காரணம் என்ற குற்றச்சாட்டு வலுவிழந்தது.**





## வித்தியாசமான விஜேதுங்க

ஜனாதிபதி விஜேதுங்க எளிமையானவர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். எளிமையானவர்கள் கூட உயர்ந்த பதவிகளுக்கு உரியவர்களாகும் போது பந்தாவும், பகட்டும் காட்டத் தொடங்குவதை அறிந்திருக்கிறோம்.

இது விளம்பரயுகம். தகுதியற்றவர்கள் கூட தங்களைப் பிரபலப்படுத்திக் கொள்வதற்கு அல்லது குறைந்த பட்சம் தங்களைப் பிரபலங்கள் என்று நம்ப வைப்பதற்கு விளம்பரத்தை விரும்புகின்ற யுகம்.

இந்த விளம்பர யுகத்திலும் விளம்பரத்தை விரும்பாத, அதுவும் அரசியலில் இருந்துகொண்டு விளம்பரத்தை விரும்பாத மனிதர்கள் ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறார்கள். எவை எல்லாம் சாதாரணமாக கருதப்பட வேண்டுமோ, அவை எல்லாம் அசாதாரணமாக கருதப்படும் அளவிற்கு அரசியலின் தரம் தாழ்ந்து விட்டது.

அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் அரசியல் என்று யாரோ ஒரு இலக்கியவாதி இந்தியாவில் கோபப்பட்டது நினைவுக்கு வருகிறது.

எளிமை, நேர்மை, வாய்மை, வாக்குறுதி தவறாமை என்பன அரசியல் வாதிகளின் குணாம்சங்களாக இருக்க வேண்டும். ஆனால் அவற்றை எல்லாம் அரசியல் வாதிகள் பலர் மறந்து விட்டார்கள். அதனால் அவற்றை நினைவில் வைத்திருப்போரை நம் ஆச்சரியமாகப் பார்க்க வேண்டி இருக்கிறது. இந்தக் காலத்தில் இப்படியும் இருக்க முடியுமா என்று வியக்கவும் செய்கிறோம்.

ஜனாதிபதி விஜேதுங்கவும் நம்மை வியக்க வைக்கிறார். ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் அரச கட்டுப்பாட்டிலுள்ள வெகுஜனத் தொடர்புச் சாதனங்களுக்கு தனைப் பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டாமென்று பணித்துள்ளதாக கூறப்படுகிறது.

புதிய ஜனாதிபதியின் பணிப்பு வெகுஜனத் தொடர்புச் சாதனங்களோடு தொடர்புடையவர்களை ஆச்சரியப்படுத்தியிருக்கிறதாம்.

தம்மைப் பற்றிய செய்திகள் அடிக்கடி இடம் பெற வேண்டுமென்று தொலைபேசியூடாகத் தொல்லைப்படுத்தும் சில அமைச்சர்களையும் இந்த நேரத்தில் அவர்கள் நினைத்துப் பார்த்துக் கொள்கிறார்களாம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

தனது கட்சியினர் கூட குறுக்கு வழியில் சம்பாதிப்பதை அனுமதிக்கவில்லை என்று மறைமுகமாகப் பாராட்டி இருக்கிறது.

ஆனால் காலஞ்சென்ற ஜனாதிபதி உயிரோடு இருந்தபோது அப்பத்திரிகை வேறு விதமாகக் கூறி இருந்ததையும் நாம் கவனிக்க வேண்டும்.

**நாட்டின் சட்டம், ஒழுங்கு அமைப்புகள் மீது நம்பிக்கையீனங்களைத் தோற்றுவிப்பது ஜனநாயக ஒழுங்கு முறைக்கு ஆபத்தானதாக அமையும் என்று உயர் பொலிஸ் அதிகாரிகள் சிலர் வேதனைப்பட்டுக் கொள்ளுகின்றனர்.**

இவற்றின் மூலம் ஆதாரமற்ற ஊகங்கள், வதந்திகள் என்பவற்றின் அடிப்படையில் இரு அரசியல் தலைவர்களதும் படுகொலை விசாரணைகள் இடையூறு செய்யப்படுகின்றன.

உண்மையான கொலையாளிகள் யார் என்பதை நியாயமான நீதி விசாரணை ஒன்றின் மூலம் கண்டறிவதற்கு முன்னரே, ஊகங்களின் அடிப்படையில் தீர்மானங்களுக்கு வருமளவிற்கு மக்கள் தூண்டப்படுகிறார்கள்.


லலித் அத்துலத் முதலி சுட்டுக் கொல்லப்பட்டபோது அவரது கட்சியினர் உடனடியாகவே தமது அரசியல் எதிரியான பிரேமதாச மீது குற்றஞ் சாட்டினார்கள். பிரேமதாச கொல்லப்பட்ட போது ஜக்கிய தேசியக் கட்சியினர் உடனடியாக யார் மீதும் குற்றம் சுமத்தவில்லை.


கொலைக்குக் காரணமானவர்கள் புலிகள் அமைப்பினரே என்ற சந்தேகம் விசாரணைகளின் மூலம் வெளிவந்தபோதும் அவர்கள் வாய் திறக்கவில்லை.

ஆனால் லலித் அத்துலத் முதலியின் கொலைக்குப் புலிகளே காரணம் என்று அரசாங்கத் தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்ட போது அதை உடனடியாக மறுத்து எதிர்க்கடசிகள் அதனை இனவாதத்தைத் தூண்டும் முயற்சி என்றும் கண்டித்தனர்.

அதே எதிர்க்கட்சியினர், ஜனாதிபதி பிரேமதாச கொல்லப்பட்ட போது புலிகள் தான் காரணம் என்று உடனடியாக அறிக்கை விட்டனர்.

அதே நேரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான திரு. அநுரா பண்டாரநாயக்கா விடுத்திருந்த அறிக்கை வித்தியாசமானதாகக் காணப்பட்டது.





அரசியல் சதுரங்கங்கள் நிறுத்தப்பட்டுப் பயங்கரவாத அச்சுறுத்தலை வெற்றி கொள்ள அனைவரும் ஒன்றுபட வேண்டுமென்று அவர் கூறி இருந்தார்.

திரு. அநுரா பண்டாரநாயக்காவின் அறிக்கை மூலம் தென் இலங்கை அரசியல் கட்சிகள் ஒருவரை ஒருவர் குற்றஞ் சாட்டிக்கொண்டிருப்பது அர்த்தமற்றது என்பதை எதிர்கட்சியில் உள்ள ஒருவரே ஏற்றுக் கொண்டதாகத்தான் கருதவேண்டி இருக்கிறது.

இன்றுவரை இரண்டு அரசியல் தலைவர்களதும் படுகொலைகளுக்கு காரணமானவர்கள் யார் என்பது தெளிவாக முன்வைக்கப்படவில்லை.

லலித் கொலைக்குப் புலிகள்தான் காரணம் என்று பொலிசார் கூறியதும், பின்னர் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புகளால் அப்படிக் கூறவில்லை இப்படித்தான் கூறினோம், அப்படியும் இருக்கலாம். இப்படியும் இருக்கலாம் என்று பொலிஸ் துறையின் பொறுப்பாளர்கள் நழுவ முற்பட்டதும் பொலிஸ் துறைக்கும் அரசியல் நெருக்கடிகள் தாக்கங்கள் கொடுப்பதை உணர்த்தியது.

அந்த அனுபவத்தினாலோ, என்னவோ, காலஞ்சென்ற ஜனாதிபதியின் கொலை விவகாரத்தில் பொலிசார் வாயை திறக்கவில்லை.

அரசியல்வாதிகள் தங்களுக்குள் இருக்கக் கூடிய பிணக்குகளால் பொலிசாரின் தலையில் பழியைப் போடுவது பொலிஸ் அதிகாரிகளுக்கு சற்றுக் கசப்பைக் கொடுத்திருக்கிறது.

பொலிசாரை நம்ப முடியாதென்று அரசியல் கட்சிகள் சில கூறத் தலைப்பட்டமையும் பொலிசார் மட்டத்தில் அதிருப்திகளைத் தோற்றுவித்துள்ளது.

நாட்டின் சட்டம், ஒழுங்கு அமைப்புகள் மீது நம்பிக்கை மீனங்களைத் தோற்றுவிப்பது ஜனநாயக ஒழுங்கு முறைக்கு ஆபத்தானதாக அமையும் என்று உயர் பொலிஸ் அதிகாரிகள் சிலர் வேதனைப் பட்டுக் கொள்ளுகின்றனர்.

தற்போது காலஞ் சென்ற ஜனாதிபதி பிரேமதாசவின் கொலை விசாரணை சி.ஐ.டி.யினர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியினரின் வாயை மூடுவதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டிருக்கலாம் என்று ஒரு கருத்து நிலவுகிறது.

எப்படியோ விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை அறிவதற்கு அனைவருமே ஆர்வம் கொண்டிருக்கின்றனர்.

அதே வேளையில் மேலும் அரசியல் படுகொலைகள் நிகழாமல் தடுப்பதற்குரிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது.

தலைநகரில் பாதுகாப்புக்கு உத்தரவாதமான சூழலை ஏற்படுத்த அரசாங்கத்தால் முடியவில்லை என்ற கருத்து பொதுமக்கள் மத்தியில் ஏற்படுமானால் அது அரசாங்கத்திற்கு பாதகமானதாக அமையும்.

ஆனால், தலைநகரில் பதட்டத்தை ஏற்படுத்தி பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதில் நாட்டம் கொண்டிருக்கின்ற சக்திகள் யார்? பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல்கள் எந்தத் திசைகளில் இருந்து வருகின்றன என்பவற்றைத் தீர்க்கமாக வரையறுத்துக் கொள்ளாமல் சரியான திசையில் அடியெடுத்து வைக்க முடியுமா என்பதே இன்றுள்ள கேள்வி ஆகும்.

தலைநகரில் ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை நிலவுவது வேறு எவரையும் விட புலிகளுக்கே சாதகமான நிலமையைத் தோற்றுவிக்கும் என்பது பொதுவான கருத்தாகும்.

லலித் அத்துலத் முதலியின் கொலையைத் தொடர்ந்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நெருக்கடியும், அதன் பின்னர் ஜனாதிபதி பிரேமதாசவின் படுகொலையை அடுத்து ஏற்பட்ட சூழ்நிலைகளும் பாதுகாப்பு படையினரின் கவனம் முழுவதையும் தென்திசை நோக்கித் திருப்பி இருக்கின்றன.

புலிகள் அமைப்பைப் பொறுத்தவரையில் கொலைகளுக்கு அவர்கள் தான் காரணம் என்ற கருத்தில் உண்மை இருக்குமானால், ஒரு கல்லில் இரு மாங்காய் அடித்திருக்கிறார்கள். ஒன்று, அறிவிக்கப்படாத யுத்த நிறுத்தம் போன்ற சூழ்நிலை வடக்கே ஏற்பட்டிருக்கிறது. இன்னொன்று, தெற்கே தமக்கெதிரான நடவடிக்கைகளுக்கு உறுதியான தலைமைத்துவத்தைப் பலவீனப்படுத்தி இருக்கிறார்கள்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவின் கொலையோடு தெற்கின் அரசியல் தலைமைத்துவத்தை அழித் தொழிக்கும் புலிகளின் திட்டம் ஆரம்பமானதென்று நம்பப்படுகிறது.

புலிகள் தனி நபர்களை அழித் தொழிப்பதனால் இலட்சியங்களில் வெற்றி அடைய முடியுமா என்கின்ற வாதப்பிரதிவாதங்களில் எல்லாம் ஈடுபடுவதில்லை. அவர்களைப் பொறுத்தவரை சில முக்கியமான தனி நபர்களை அழித் தொழித்ததன் மூலம் அவர்கள் எதிர்பார்த்த விளைவுகளை உருவாக்கி இருக்கின்றன.

ரஞ்சன் கொல்லப்பட்ட பின்னர் பாதுகாப்புப் படைகளுக்குள் முன்னர் இருந்த உற்சாகம் சற்றும் தணிந்தது என்பதில் ஐயமில்லை. ராஜீவ் கொலையின் மூலம் இந்தியாவின் நிரந்தர விரோதத்தைப் புலிகள் சம்பாதித்துக் கொண்டார்கள் என்று எல்லோராலும் சொல்லப்பட்ட போதும், புலிகளைப் பொறுத்த வரையில், ராஜீவ் பிரதமராக வந்திருந்தால் ஏற்பட்டிருக்கக் கூடிய நிலைமையை விட இது ஒன்றும் மோசமானது அல்ல என்றே கருதுகிறார்கள்.

புலிகள் அமைப்புக்கெதிரான தமிழர் அமைப்புகளின் கருத்துப்படி, வடக்கு, கிழக்கில் தமிழர் தலைமைத்துவத்தை அழிப்பதில் வெற்றி கண்ட புலிகள், இப்போது தெற்கே தங்கள் கரங்களை நீட்டி இருக்கிறார்கள்.

இந்தக் கூற்றில் உண்மை இருக்குமானால், அரசாங்கத்தோடு ஒத்துழைத்துச் செயற்படும் தமிழர் அமைப்புக்கள் அதனைத் தடுப்பதற்கு முடியாமல் போனது ஏன்?

இந்தக் கேள்விக்கு காரசாரமான பதில்களை தமிழர் அமைப்புக்கள் கைவசம் வைத்திருக்கின்றன.

தகவல் கொடுத்தால் பொலிசார் உற்சாகமான நடவடிக்கை மேற்கொள்வதில்லை.

அப்பாவிகள் என்று உறுதி செய்யப்பட்ட எத்தனையோ தமிழ் இளைஞர்கள் சிறையில் இருக்கிறார்கள். ஆனால் நாம் புலிகள் என்று உறுதிப்படுத்தி பிடித்துக் கொடுத்தவர்களைக் கூட பொலிசார் விட்டு விடுகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், ஆளும் கட்சியில் இருக்கும் சில தமிழ் அரசியல்வாதிகள் தமக்கு முன்பின் தெரியாதவர்களைக் கூடத் தமக்கு வேண்டப்பட்டவர்களின் கோரிக்கையின்பின் விடுவித்து விடுகின்றனர்.

இவ்வாறு நிறையக் குறைபாடுகளைத் தமிழர் அமைப்பு வட்டாரங்கள் வெளியிடுகின்றன.

தேவையற்ற அரசியல் தலையீடுகள், அரசாங்கத்தில் இருந்து கொண்டு புலிகளுக்குப் பாராட்டு வழங்கும் தமிழ் அரசியல் வாதிகள் பற்றி எல்லாம் பாதுகாப்பு வட்டாரங்களிலும் அதிருப்தி இருக்கிறது.

## நெத்தி அடி

*இந்நாட்டு மக்களை தொடர்ந்து ஏமாற்ற முடியாது. அவர்களுக்கு நாற்பது வருட காலம் தேர்தலில் வாக்களித்த அனுபவம் இருக்கிறது. கடந்த காலத்தில் நடந்த தேர்தல் அத்துமீறல்களைப் பற்றி மக்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள்.*

-முன்னாள் அமைச்சர் காமினி திஸாநாயக்கா-

*உண்மைதான். 1981ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாவட்ட சபைத் தேர்தலின் போது எக்கச்சக்கமான தில்லு முல்லுகள். சுத்து மாத்துகள் நடந்ததாகத் தான் சொல்கிறார்கள். அந்தத் தேர்தலின் போது நீங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்ததாகவும் சொல்கிறார்கள்.*

தூய்மையான நோக்குடன் செயற்பட்டு வந்த எத்தனையோ அறிஞர்கள் அரசியலில் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். ஆனால் இலங்கையிலும், இந்தியாவிலும் அரசியல் வயிறு வளர்ப்போரிடம் அடிமைப்பட்டுக் கிடக்கிறது.

-விரிவுரையாளர். திரு. ரெரன்ஸ் புரசிங்க-

*காலத்திற்கு ஏற்ற கருத்து. அரசியல் வியாபாரிகள் அறிந்தால் கொஞ்சம் முகம் சுளிப்பார்கள்.*

அமைச்சர் ஹமீத் நீண்ட கால அரசியல் பாரம்பரியம் உடையவர். சபை முதல்வராக அவரை நியமித்திருக்கலாம்.

-முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப்-

*யோசிக்க வேண்டிய விசயம் தான்*

நடந்து முடிந்த சம்பவங்களைப் பார்க்கும் போது தமிழ் மக்களின் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வல்லமை இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளுக்கும் இல்லை.

-கூட்டணித்தலைவர் மு. சிவசிதம்பரம்-

*அப்படிச் சொல்லும் நீங்கள் அன்று நாட்டை விட்டுப்போனது ஏனோ? இப்போதும் கூட பிரச்சினைகளைத் துணிச்சலாகப் பேசத் தயங்குவது ஏனோ? அதுவும் வல்லமைக் குறைச்சல் தானாக்கும்.*

அமைச்சரவையை விரைவில் மாற்றி அமைக்கும் உத்தேசம் எதுவுமில்லை.

-ஜனாதிபதி விஜேதுங்க-

*எத்தனை பேர் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்களோ?*

பிரபாகரனுடன் பேச யாராவது உதவினால் அது உன்னதமான செயல்.

-ஜனாதிபதி விஜேதுங்க-

*பேசிய பலரே உயிரோடு இல்லை. உதவி செய்ய யாருக்குத் துணிச்சல்வரும்.*

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அடுத்த ஜனாதிபதி யார்?

## அலசுவது - இராஜதந்திரி

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் மறைவு இலங்கையின் ஆட்சிப்பீடத்தில் ஓர் உறுதிமிக்க தலைமைத்துவம் ஏற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றது.

புதிய ஜனாதிபதி திரு.டி.பி. விஜேதுங்க இன்னும் சுமார் ஒன்றரை வருட காலம் மட்டுமே ஆட்சியிலிருக்க முடியும். அரசியலமைப்பு ஏற்பாட்டின் பிரகாரமே பாராளுமன்றத்தினால் அவர் நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார்.

ஆனால் நாட்டுமக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் ஜனாதிபதியாக யார் எதிர்காலத்தில் தெரிவு செய்யப்படலாம் என்பதே தற்போது கேள்விக்குரிய விடயமாக இருக்கின்றது.

மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அரசியல் ரீதியாகப் பல சவால்களை எதிர் கொண்டிருந்தார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா காலனித்துவ பாரம்பரியங்களைத் தழுவிய ஒரு தலைவராக இருக்கவில்லை. அவர் ஒரு சராசரி இலங்கைக் குடிமகன் போன்றே தமது அரசபோக வாழ்க்கையையும் மேற்கொண்டிருந்தார்.

அவரது இத்தகைய எளிமையான, மக்களோடிணைந்த வாழ்க்கையே அவரை இலகுவில் கொலைஞனின் வலையில் சிக்கவும் வழிவகுத்திருந்தது.

இந்நிலையில் இலங்கையில் நிலவும் தற்போதைய அரசியல் மற்றும் சமூக, பொருளாதார சூழ்நிலைகள் மிகவும் மாறுபட்ட தன்மைகளைக் கொண்டவையாக விளங்குகின்றன.

அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் வெறுமனே பிரச்சினைகளாக மட்டும் காணப்படவில்லை. அவை உயிராபத்தை உண்டு பண்ணக்கூடிய பூதாகரமான விவகாரங்களாகவும் விகாரமடைந்து காணப்படுகின்றன.

"அரிசி தருவோம், வீடு தருவோம், வேலை தருவோம்" என்றெல்லாம் காட்டுக் கூச்சல் போட்டு அரசியல்லாபம் தேடிய காலம் தற்போது மலையேறிவிட்டுள்ளது.

இன்றைய மக்கள் சமுதாயம், ஒரு பிரச்சினையை நடைமுறைச் சாத்தியமாக அணுகுவதையே பெரிதும் வரவேற்கின்றது. அத்துடன் பிரச்சினைகளைத் தூர நோக்கோடு நன்கு அலசி ஆராயும் மனப்பக்குவத்தைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

எனவே எதிர்காலத் தலைவர்கள் பாரதூரமான பிரச்சினைகளை வெறுமனே தட்டிக்கழித்து அரசியல் நடத்தவோ, ஆட்சியிலிருக்கவோ முடியாதென்பதையே திரு. ஆர். பிரேமதாசாவின் திடீர் மறைவு உணர்த்தி நிற்கின்றது.

இலங்கை இன்று விரிவான திறந்த பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடித்துவரும் ஒரு நாடாகும். உலகின் பல்வேறு பகுதி களையும் சேர்ந்த முதலீட்டாளர்கள் கடந்த 15 வருடகாலங்களில் இலங்கையில் பெருமளவிலான முதலீடுகளை மேற் கொண்டுள்ளனர்.

இதுதவிர ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளிலும் தாராளப் போக்குக் கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றது.

சராசரி இலங்கையர்களின் சிந்தனா சக்தியும் சர்வதேச ரீதியில் சிறகடித்துப் பறக்க ஆரம்பித்துள்ளது. இலங்கையில் நிலவும் பிரச்சினைகள் இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் வரம்புகளுக்குள் மட்டுமே வைத்து ஆராயப்பட்ட நிலை மாற்றமடைந்து, சர்வதேச நிலவரங்களுடன் உள்நாட்டு நடவடிக்கைகளையும் ஒப்பிட்டு நோக்குமளவுக்கு மக்களின் அறிவு விசாலமடைந்துள்ளது.

எனவே இத்தகைய மாற்றங்களுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய ஒருவரே இலங்கையின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்க முடியுமே தவிர, மேடைகளில் தோன்றி வார்த்தை ஜாலங்களால் மக்களைக் கவர்ந்திழுத்து அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்ற நிலை எங்கேயோ சென்று விட்டதை தற்போது உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

திரு.ஆர். பிரேமதாசாவின் மறைவையடுத்து ஆட்சி மாற்றம், இலங்கையில் மிகச் சுமுகமான முறையில் இடம் பெற்றிருந்தது. பிரதமராகப் பதவி வகித்திருந்த திரு.டி.பி. விஜேதுங்க தற்போது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கூடவே பாராளுமன்ற சபை முதல்வராக இருந்த இளம் அரசியலாளர் திரு. ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்த வரை அக்கட்சியின் ஒருமைப் பாட்டைப் பேணி நிற்பதுடன், நாட்டுமக்களின் விசுவாசத்தையும் பெறக்கூடிய ஒருவரே இன்னும் ஒன்றரை வருட காலத்தில் அக்கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட முடியும்.


இந்த நிலையில் தற்போதைய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க ஐக்கிய தேசியக் கட்சியினுள் மதிப்புக்குரிய ஒரு சிரேஷ்ட தலைவராகக் கணிக்கப்படு கின்றார்.

ஆயினும் மக்கள் முன்பாக ஒரு உறுதியான இடத்தைப் பிடிப்பதற்கு அவர் இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டியுள்ளது. அமைதியான அதேவளை பிரச்சினைகளை நன்குணர்ந்த ஒரு தலைவராக திரு.டி.பி விஜேதுங்க தம்மை இனங்காட்டியுள்ளார். ஆயினும் அவர் தாம் அறிந்து வைத்துள்ள பிரச்சினைகளுக்கு கைவசம் கொண்டுள்ள தீர்வுகளையும் முன்வைக்கும் பட்சத்திலேயே அவரது அரசியல் எதிர்காலம் குறித்துத் தெளிவாக எதனையும் கணிப்பீடு செய்து கொள்ள முடியும்.

பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியில் இன்று ஒரு முன்னணி உறுப்பினராக திகழுகின்றார். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனாவின் அரசியல் பாசறையில் இளம் பாராளுமன்ற உறுப்பினராக திரு. ரணில் விக்கிரமசிங்க பிரவேசித்திருந்தார்.

குடும்ப ரீதியாகவும் இலங்கையின் அரசியலுடன் இவருக்கு நெருங்கிய உறவுகள் உண்டு. இவர் ஒருவகையில் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனாவின் நெருங்கிய உறவினரும் கூட. அத்துடன் ரணில் இலங்கையின் பத்திரி

**"சராசரி இலங்கைக் குடிமகன் போன்றே தமது அரசபோக வாழ்க்கையையும் மேற்கொண்டிருந்தார்."**



கைத்துறை ஜாம்பவான் என்று வர்ணிக்கப்பட்ட அமரர் திரு.டி..ஆர். விஜயவர்தனாவின் பேரனுமாவார். திரு. டி.ஆர். விஜயவர்த்தனா குடும்பத்தின் அரசியல் பாரம்பரியம் பழமை வாய்ந்த தொன்றாகும்.

இந்நிலையில் திரு. ரணில் விக்கிரமசிங்க ஒரு புதிய தலைமுறையின் இளந் தலைவராக ஏற்றுக் கொள்ளப்படும் வாய்ப்பு அதிகமாகவே இருக்கின்றது.

ஆயினும் தாம் வாழ்ந்து வந்த தலைநகரின் சொகுசு வாழ்க்கையின் பிடியிலிருந்தும் விலகி தம்மை ஒரு மக்கள் தலைவராக வளர்த்துக் கொள்ள வேண்டிய நிலையில் திரு. ரணில் தற்போது காணப்படுகின்றார்.

இதன் மூலமே அவர் ஒரு பரந்துபட்ட அரசியல் செல்வாக்கைக் கட்டியெழுப்ப முடியும். கூடவே தேசிய ரீதியில் ஒரு தலைமைத்துவத்துக்கும் அவரால் துணிந்து போட்டியிடவும் முடியும்.

இதே வேளை முன்பு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான உறுப்பினராக இருந்தவரும் தற்போது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஸ்தாபகரும் உபதலைவருமான திரு. காமினி திசாநாயக்காவின் அரசியல் எதிர்காலமும் கவனத்துக்குரியதொன்றாகவே விளங்குகின்றது.

திரு. காமினி திசாநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்தபோதிலும் மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவைப் பகைத்துக் கொண்டதன் மூலம் அவரது அரசியல் வாழ்க்கையில் திருப்பம் ஏற்படலாயிற்று.

திரு.காமினி திசாநாயக்கா, கொலையுண்ட தமது சகாவான திரு.லலித் அத்துலத் முதலியுடன் இணைந்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்ற புதிய கட்சியை ஆரம்பித்தார்.

இவர்கள் இருவரும் மாகாண சபைத் தேர்தலைத் தமது செல்வாக்கை எடைபோடுவதற்கான ஓர் அளவு கோலாகவே கருதி வந்தனர்.

ஆனால் திரு. லலித் அத்துலத் முதலி மறைந்து விட்ட நிலையில் தமது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, எதிர்பார்த்தளவு வெற்றியை கடந்த மாகாண சபைத் தேர்தலில் பெறமுடியாமல் போனதை தனிமையுடன் ஜீரணிக்க வேண்டிய வராக திரு. காமினி திசா நாயக்கா தற்போது காணப் படுகின்றார்.

இந்நிலையில் இன்னும் ஒன்றரை வருடங்களில் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகக் குதிக்கும் எண்ணம் திரு. காமினி திசாநாயக்காவுக்கு இருக்கு மானால் அவர் தமது கட்சியை மேலும் பலப்படுத்த வேண்டியவராகக் காணப்படுகின்றார்.

எதிர்க்கட்சி தலைவியான திருமதி. சிறிமாவோ பண்டார நாயக்கா, தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வெறும் ஓர் 'அடையாளச் சின்னம்' என்ற நிலைக்கு தள்ளப்பட்ட வராகக் காணப்படுகின்றார். அவரால் தமது கட்சியின் செயல்பாடு குறித்து எதுவித உறுதியான முடிவும் எடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது. உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றவரான திருமதி. பண்டாரநாயக்கா 1989ம் ஆண்டு மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை எதிர்த்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டிருந்தார்.

ஆயினும் திருமதி. பண்டாரநாயக்காவினால் அத்தேர்தலில் தோல்வியையே தழுவ முடிந்தது.

திருமதி பண்டாரநாயக்காவின் புதல்வர் திரு. அநுரா பண்டாரநாயக்கா, புதல்வி



**"ஹேமாவை முதன்மைப்படுத்தும் அளவிற்கு ஐ.தே.க. ஒன்றும் அனாதையாகி விடவில்லை"**

திருமதி. சந்திரிகா குமாரணதுங்க ஆகியோர் மத்தியிலான பூசல்கள் இன்று அக்கட்சியைப் படாதபாடுபடுத்தி விட்டுள்ளது. கூடவே அக்கட்சியிலுள்ள பல சிறந்த அரசியலாளர்களின் எதிர்காலமும் இந்த உட்கட்சிப் பூசல்களினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே நாட்டுமக்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தற்போதைய நிலையை நன்கறிந்து வைத்துள்ளார்கள். உட்கட்சி மோதலை மூடி மறைத்து அவர்கள் எந்த வகையிலும் அரசியல் லாபம்தேட முடியாது.

ஆயினும் கடந்த மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனது நிலையை நன்குணர்ந்து இடது சாரிக்கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு, ஐ.தே.கவுக்கு அடுத்தபடியாக வெற்றியீட்டியிருந்து. கூடவே தலைநகரை உள்ளடக்கிய மேல் மாகாணசபையையும் இக் கூட்டணி கைப் பற்றியுள்ளது.

எனவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் இத்தகைய தந்திரத்தை கையாள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முன்வரலாம்.

இருந்த போதிலும் இந்த கூட்டணி ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதில் எவ்வளவு தூரம் ஒற்றுமைப்படும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் துணைவியரான திருமதி. ஹேமா பிரேமதாசாவும் அரசியலில் பிரவேசிக்கும் சாத்தியக் கூறுகள் பலமாக இருப்பதையே அவரது நெருங்கிய சகாக்கள் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. திருமதி. ஹேமா பிரேமதாசா அரசியல் ரீதியாக இதுவரை எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொண்டிராத போதிலும் ஓர் அரசியல்வாதிக்குரிய மிடுக்குடனேயே தமது கணவருடன் அவர் வாழ்க்கை நடத்தினார்.

அத்துடன் இலங்கையின் முதல் பெண்மணி என்ற ரீதியில் பல சமூக, மற்றும் புனர்வாழ்வுத் திட்டங்களை திருமதி. ஹேமா பிரேமதாசா தாமாகவே திட்டமிட்டு செயற்படுத்தி வந்தார்.

இதற்கென அவர் பல பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், கூட்டுத்தாபன உயரதிகாரிகள், மற்றும் படையதிகாரிகள் ஆகியோருடன் நெருங்கிய தொடர்புகளையும் வைத்திருந்தார். ஆயினும் அவர் கட்சி சார்பற்ற முறையில் ஒரு முதல் பெண்மணி என்ற வகையிலேயே தமது பணிகளை மேற்கொண்டு வந்தார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பூதவுடல் சிதையில் வைக்கப்படுமுன்னர் நாட்டுமக்களுக்கு திருமதி. ஹேமா பிரேமதாசா நிகழ்த்திய உரையும் சிந்தனைக்குரிய தொன்றாக விளங்குகின்றது.

"மறைந்த எனது கணவரின் அபிலாஷைகளை நிறைவேற்ற நாட்டுமக்கள் எனக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்" என்று திருமதி ஹேமா பிரேமதாசா தமது உரையில் கேட்டிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை அக்கட்சி உறுதியுடனேயே இருக்கின்றது. திரு. ஆர். பிரேமதாசாவின் மறைவையடுத்து அவரது துணைவியாரை முதன்மைப் படுத்தி அரசியல் ஒரு பாட்டைப் பேணுமளவுக்கு அக்கட்சி எந்த விதத்திலும் அநாதையாகி விடவில்லை.

ஆகவே திருமதி. ஹேமா பிரேமதாசாவின் அரசியல் எதிர்காலம் ஐ.தே.க உறுப்பினர்களின் ஆதரவிலேயே பெரிதும் தங்கி நிற்கின்றதெனக் குறிப்பிடலாம்.

## வள்ளியைத் தருகிறார் ரஜினிகாந்த்



தமிழ்த் திரையுலகின் முடிசூடா மன்னனான ரஜினிகாந்த் சொந்தப்படத் தயாரிப்பில் இறங்கியிருக்கிறார்.

ரஜினிகாந்திற்கு முன்னர் தமிழ்த்திரையுலகின் முடிசூடா மன்னர்களாக இருந்தவர்கள் அமரர் எம்.ஜி.ஆரும் சிவாஜியும். அவர்களும் சொந்தப் படங்களைத் தயாரித்துத் தாமே நடித்தார்கள்.

முன்னவர்கள் பாதையில் ரஜினி முதலில் தயாரித்த திரைப்படம் மாவீரன். எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு மாவீரன் வெற்றி பெறவில்லை என்பதால் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் தயாரிப்புத் துறையில் இறங்கி இருக்கிறார்.

ரஜினி ஆர்ட்ஸ் என்கிற பெயரில் ரஜினிகாந்த் தயாரிக்கும் புதிய படத்தின் பெயர் வள்ளி.

ரஜனி ரசிகர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. வள்ளி திரைப்படத்தின் கதை - திரைக்கதை வசனம் ஆகியவற்றையும் ரஜினியே ஏற்றுள்ளார்.

வள்ளி திரைப்படத்தின் தொடக்க விழா அண்மையில் சென்னையில் நடைபெற்றது.

வள்ளி சம்மந்தப்பட்ட அனைத்துக் கலைஞர்களும், ரஜினிகாந்த் உட்பட, தூய வெள்ளை ஆடையில் தோன்றி அசத்தினார்கள்.

ரஜினி ஆர்ட்ஸ் என்கின்ற புதிய திரைப்பட நிறுவனத்தைப் பிரபல இயக்குனர் கே. பாலச்சந்தர் தொடக்கி வைத்தார். ரஜினிகாந்த் அவர் காலில் விழுந்து ஆசி பெற்றார்.

புதிய திரைப்படத் தயாரிப்பின் மூலம் தனது நண்பர்களுக்கும், தான் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் உதவியவர்களுக்கும் உதவுவதே ரஜினிகாந்தின் நோக்கமாகும். அது பற்றி ரஜினிகாந்த் கூறும் போது, "என்னுடன் எனக்காகக் கஷ்டப்பட்டவர்களை மறக்க முடியவில்லை. அவர்களுக்குப் பணம் கொடுத்து வாழ வைக்கலாம் என்று நினைத்தேன். மீனைக் கொடுப்பதை விட, மீனை எப்படிப் பிடிப்பது என்று கற்றுக் கொடுப்பது தான் சரி என்று முடிவு செய்தேன். எனவே தான் என் நண்பர்களுக்குப் பணம் தரவில்லை, தொழிலைத் தந்திருக்கிறேன். இது என் படமல்ல, ஜனங்களின் படம்." என்றார் ரஜினிகாந்த்.



படவிழாவில் ரஜினி சத்தியராஜ்

## உருவாகிக் கொண்டிருக்கிறது உடன்பிறப்பு

சத்தியராஜின் மனேஜர் இராமநாதனுக்கு ஒரு ஆசை. அதிகமான பொருட் செலவில் அமர்க்களமான திரைப்படங்களைத் தயாரிக்க வேண்டுமென்பதுதான் அந்த ஆசை. ஆனால் அத்தனை திரைப்படங்களிலும் நாயகன் சத்தியராஜதானாம்.

வாத்தியார் வீட்டுப் பிள்ளை, நடிகன், பிரம்மா, திருமதி பழனிச்சாமி போன்ற திரைப்படங்களின் தயாரிப்பாளரான ராமநாதன் இப்போது தயாரித்துக் கொண்டிருக்கும் திரைப்படம் உடன்பிறப்பு. வோல்டர் வெற்றிவேல் மூலம் சத்தியராஜிற்கு மீண்டும் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த பி. வாசு தான், உடன் பிறப்பையும் இயக்குகிறார்.

உடன்பிறப்பு என்கின்ற தலைப்பில் அரசியல் வாடை வீசுகிறது. கலைஞர் கருணாநிதி தனது தொண்டர்களை உடன்பிறப்பே என்றுதான் அழைப்பதுண்டு. ஆனால் படத்தில் அரசியல் வாடை கடுகளவு கூடக் கிடையாது" என்கிறார் இராமநாதன். படத்தில் ஏழு பாடல்கள், ஹெலிப்கொப்டரில் சண்டை, நெருக்கமான உரசல், புரசல்கள். மொத்தத்தில் கப்பர் மசாலா.



## கமலின் பெருந்தன்மை

நாகராஜ சோழன் என்னும் திரைப்பட நடிகர் மாரடைப்பால் மரணமானவர். அவரது குடும்பம் வறுமையில் வாடியது. நாகராஜ சோழனுக்கு இரண்டு குழந்தைகள். குழந்தைகள் இருவருக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் வைப்பு நிதியை வாரி வழங்கியிருக்கிறார் கமலஹாசன். வசதியாக எதையும் மறந்து விடுவோர் மத்தியில் வித்தியாசமானவர் கமல்.

சினிமா உலகம் பற்றி கமலஹாசன் என்ன நினைக்கிறார்? இதோ அவரே சொல்லுகிறார்.

சினிமா உலகம் ஸ்வெட்டர் மாதிரி. ஒரு நூலைப் பிடித்து இழுத்துக் கொண்டே இருந்தால் மளமளவென்று வந்து கொண்டே இருக்கும். இழுக்கிற நூலை உடனே கத்தரிக்க வேண்டும். அப்போது தான் ஸ்வெட்டரைப் பாதுகாக்க முடியும். நம்மிடம் கத்தரிக்கோல் இல்லாவிட்டால் அரசாங்கத்திடமாவது கத்திரிக்கோல் வாங்கிப் பாதுகாக்க வேண்டும் என்கிறார் கமலஹாசன்.



## ரௌடிகளுடன் மோதும் லேடி சுப்பர் ஸ்ரார்

வைஜெயந்தி ஐ.பி.எஸ். பாணியில் மீண்டும் விஜய சாந்தி தோன்றி நடித்து வரும் திரைப்படம் பொலிஸ்லொக்கப். குதிரைக் கூட்டத்தின் மத்தியில் ரௌடிகளைப் பந்தாடுவது போன்ற காட்சியில் டூப் இல்லாமல் நடித்திருக்கிறார் விஜயசாந்தி.

நான் சண்டைக் காட்சிகளில் அதிகம் தோன்றுவதையே இரசிகர்கள் மிகவும் விரும்புகிறார்கள் என்கிறார் விஜயசாந்தி.

## மயக்கும் மோகினி

ஹொலிவூட் திரையுலகின் பல லட்சம் ரசிகர்களை தூங்க விடாமல் தொல்லை கொடுக்கும் கவர்சித் தாரகைதான் லிஸா மினெல்லி.

இளமைப் பருவத்தில் காமக் களியாட்டங்களில் ஈடுபட்ட அந்தக் கவர்ச்சித் தாரகையின் அந்தரங்கங்கள் இப்போது அம்பலமாகி உள்ளன. லிஸாவிற்கு இப்போது நாற்பத்தேழு வயது. ஹொலிவூட்டின் நகைச்சுவை நடிகர் முதல் முன்னணி நடிகர் வரை லிஸாவின் மயக்கும் அழகின் முன் மண்டியிட்டார்கள்.

## காதோடு சொல்லுகிறோம்

* மல்லிகைப் பாடலால் பிரபலமான அந்தப் பின்னணிப் பாடகியைப் படம் பிடிக்கப் போனாராம் ஒரு பத்திரிகையின் போட்டோ கிராபர். கவர்ச்சி நடிகையை கமராவால் உரித்தெடுப்பதில் அவர் ஒரு கில்லாடியாம். பாடகியை இரண்டுதரம் கிளிக் செய்த போட்டோ கிராபருக்கு பழக்க தோஷம் விட வில்லையாம், கொஞ்சம் உங்கள் முந்தானையை விலக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார். பாடகிக்கு வந்ததாம் கோபம். அவர் போட்ட கூச்சலில், தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடினாராம் போட்டோ கிராபர்.

* மூன்றெழுத்துப் பூ நடிகைக்கு யாரோ சில இரசிகர்கள் கோயில் கட்டப் போவதாக ஒரு செய்தி வந்தது. வழக்கமாக கோயில்களில் தான் பூப் போடுவார்கள். இது பூவிற்கே கோயில் கட்டும் புதிய முயற்சி. அந்த இரசிகர்கள் பற்றி பூ நடிகையின் அபிப்பிராயம் தான் முக்கியமானது. "ஏதோ ஒரு ஊரில் வேலை கெட்ட பசங்கள் சில பேர் சேர்ந்து செய்கிற வேலை. ஸடுப்பிட்ஸ், என்கிறாராம்.

* தற்போது மார்க்கட் நிலவரம் சற்று டல்லாகிவிட்ட நாலெழுத்து நடிகை பிரபல நடிகர்களுக்கு வலிந்து போன் செய்கிறாராம். ஹலோ ஆர் யூ என்கிறாராம். அவர் கப்பரான மூன்றெழுத்து நடிகரைப்பற்றி முன்னர் விழுந்து பாராட்டியது வேறுசில முன்னணி நடிகர்களுக்குப் பிடிக்கவில்லையாம்.

* நடிகர்கள் சிலரது பெயரைக் கேட்டால் நடிகைகள் சிலருக்கு அலர்ஜியாம். நெருக்கமான காட்சிகளில் கமெராவுக்குத் தெரியாமல் கிள்ளிவிடுகிறார்களாம்.

* பெரிய எதிர்காலம் உண்டென்று அந்த நடிகைக்கு ஐஸ் வைத்து உள்ளே வெளியே என்பதற்கு புதிய பாதை போட்டிருக்கிறாராம் அந்த இயக்குனரும் நடிகருமான அர்ச்சனாவின் சாரதியின் பெயரைக் கொண்டவர். மித்தது போதாதென்று அங்கங்கே குபீரலப்பான கிள்ளல்கள் வேறு. எப்படியோ படம் நன்றாக ஓடுகிறதாம்.



## ஒரு கோடி ரூபாயில் படம்

வாட்டசாட்டமான கதாநாயகனான சரத்குமாரின் காட்டில் இப்போது மழை. நடித்துக் கொண்டிருக்கும் படங்கள், நடிக்க வேண்டிய படங்கள் என்று ஒரு நீண்ட பட்டியலையே கையில் வைத்திருக்கிறார். அதில் ஒரு படம் பாண்ட் மாஸ்ரர். ஒரு கோடி ரூபாய் செலவில் தயாராகும் வித்தியாசமான காதல்கதை. காதல் என்றால் அங்கு மோதலும் இருக்கும். சண்டைக் காட்சிகளும் தாராளமாக உண்டாம். சரத்குமாருக்கு ஜோடி ஹீரா. இயக்கம் புரியாத புதிர், சேரன் பாண்டியன், சூரியன் சந்திரன் போன்ற படங்களை இயக்கிய கே. எஸ். ரவிக்குமார்.



படவிழாவில் ரஜினியின் புத்திரிகள் சௌந்தர்யா ஐஸ்வர்யா

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## நித்தியமான செய்தி

சுப்பர் ஸ்டார் ரஜினியை வைத்து உழைப்பாளியை உருவாக்கி வரும் சந்தமாமா விஜயா கம்பைன்ஸ்காரர்கள் அடுத்தடுத் துணிச்சலான காரியம் ஒன்றைச் செய்ய இருக்கிறார்கள்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன், ரஜனிகாந்த், சத்தியராஜ், சரத்குமார், ரகுமான் ஆகியோர் உட்பட எட்டுஹீரோக்கள் இணைந்து நடிக்கும் பிரமாண்டமான திரைப்படம் ஒன்றைத் தயாரிக்கப் போகிறார்கள். இன்னும் நான்கு ஹீரோக்கள் தான் தெரிவு செய்யப்பட வேண்டும். கதை எழுதி இயக்க இருப்பவர் நட்சத்திர இயக்குனர் பி.வாசு ஜனவரியில் படப்பிடிப்பை ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறார்கள்.

நடிகர் திலகத்திற்கு நான்கு மகன்கள்.மூத்தவராக ரஜினிகாந்த். நம்பியாருக்கு நான்கு மகன்கள். மூத்தவராக சத்தியராஜ். இதுதான் கதையின் கரு. மீதிக்கதையை பி.வாசு தான் சொல்ல வேண்டும்.

## உழவன்

தமிழ் சினிமாவில் முன்னணி ஹீரோக்கள் அனைவரோடும் பானுப்பிரியா ஜோடி சேர்ந்து நடித்து விட்டார். ஆனாலும் அவருக்கொரு ஏக்கம் இருந்தது. பிரபுவோடு ஜோடி சேர்ந்து நடிக்கவில்லையே என்பது தான் அந்த ஏக்கம். இப்போது இத வம் படத்தை வழங்கிய கதிரின் இயக்கத்தில் பிரபு நடிக்கும் உழவன் படத்தில் பானுப்பிரியாதான் ஹீரோயின். ஏக்கம் தணிந்தது.

## சாதனை படைத்த 007 ..... பொண்ட். ஜேம்ஸ் பொண்ட்.

ஜேம்ஸ் பொண்ட் - ஆங்கிலப் பட ரசிகர்களின் இதயம் கவர்ந்த கதாபாத்திரம்.

ஜேம்ஸ் பொண்ட் உருவானது எப்படி?

லண்டனைச் சேர்ந்த இயன் பிளெமிங் என்ற கதாசிரியர் தன்னுடைய நாவல்களில் ஜேம்ஸ் பொண்ட் என்ற கதாபாத்திரத்தை உருவாக்கினார்.

ஜேம்ஸ் பொண்டைக் கதாநாயகனாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அவரது நாவல்கள் லட்சக்கணக்கில் விற்பனையாகின.

007 ஜேம்ஸ் பொண்ட் கதாபாத்திரத்திற்குக் கிடைத்த வரவேற்பு அந்தப் பாத்திரத்தை வைத்து திரைப்படம் தயாரிக்கும் எண்ணத்தை உருவாக்கியது.

டொக்டர் நோ என்ற பெயரில் 1962 ஆண்டில் முதல் ஜேம்ஸ் பொண்ட் திரைப்படம் வெளியாகியது. அது வசூலை வாரிக் குவித்தது.

இன்று உலகில் வாழும் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் ஜேம்ஸ்பொண்ட் படங்களைப் பார்த்துள்ளனர்.

சீன் கொனறி ஏழு படங்களிலும், ரோஜர் மூர் ஏழு படங்களிலும் ஜேம்ஸ் பொண்டாக நடித்துள்ளனர். ஜோர்ஜ் லாசன்பி ஒரு படத்திலும் டிமதி டால்டல் இரு படங்களிலும் ஜேம்ஸ் பொண்டாக நடித்தனர்.

கண்ணுக்கு விருந்து தரும் கவர்ச்சியான அழகிகள், மயிர்க் கூச்செறியும் சண்டைக் காட்சிகள் திகிலூட்டும் தந்திரக் காட்சிகள், விஞ்ஞானிகளின் கற்பனைக்கும் எட்டாத விநோதமான கருவிகள், சுறாமீன், முதலைகளுடன் மோதல்கள், வாட்டசாட்டமான வசீகரமான ஹீரோக்கள், இரும்பு போன்ற வில்லன்கள் இவை அனைத்தும் ஜேம்ஸ் பொண்ட் திரைப்படத்தின் சிறப்பு அம்சங்கள்.



சஞ்சய் தத்



பம்பாய்ப் படவுலகில் அடுத்தடுத்து அதிர்ச்சிகள். கவர்ச்சித் தாரகை திவ்யபாரதியின் மரணம் சோகத்தைப் பூசி இருந்த போது, இன்னொரு அதிர்ச்சி, சஞ்சய்தத் கைது செய்யப்பட்டது. பம்பாய்க் குண்டு வெடிப்பில் தொடர்பு வைத்திருந்தவர், துப்பாக்கி வைத்திருந்தவர் என்பது தான் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள். இப்போது சஞ்சய் பிணையில் வெளியில் வந்திருக்கும் போதும், விசாரணைகள் முடியவில்லை. பொலிஸ் அவரை இப்போதும் துருவிக் கொண்டிருக்கிறது.

## மன்னன் வள்ளலாகிறார்

படத்தயாரிப்பில் சிவாஜி பிலிம்ஸ் இப்போது தீவிரம் காட்டி வருகிறது. ஏற்கனவே கமலஹாசனை வைத்து இரண்டு வெற்றிப்படங்களை வழங்கியது சிவாஜி பிலிம்ஸ். ஒன்றுவெற்றி விழா. மற்றொன்று கலைஞன்.

தற்போது ரஜினிகாந்தை வைத்து சிவாஜி பிலிம்ஸ் தயாரிக்கப் போகும் திரைப் படத்தின் பெயர் வள்ளல். ஏற்கனவே ரஜினியை வைத்து சிவாஜி பிலிம்ஸ் தயாரித்து வெற்றி பெற்ற திரைப் படத்தின் பெயர் மன்னன்.

ரஜினி ரசிகர்களுக்கு இன்னொரு இனிப்பான செய்தி. ரஜினிகாந்தை வைத்து மாபெரும் படைப்பான தளபதியைத் தயாரித்த பட அதிபர் ஜி. வெங்கடேஷ்வரன் என்கின்ற ஜீவி தயாரிக்கும் அடுத்த படத்தில் ரஜினி நடிக்கவிருக்கிறார். இயக்கப்போவது மணிரத்தினம அல்ல. அண்ணாமலையை இயக்கிய சுரேஷ் கிருஷ்ணா. திரைப்படத்தின் பெயர் ரகசிய பொலிஸ் 009. என்ன, இனிப்பான செய்திதானே?

## இரு வல்லவர்கள் இணைகிறார்கள்

இந்தியாவில் பிறமொழிகளில் பிரபலமான நடிகர்கள் தமிழ்ப் படங்களில் தோன்றுவது வாடிக்கை.

மலையாளத்தில் சுப்பர் ஸ்டாரான மம்மூட்டி ஏற்கெனவே தமிழ்த் திரைப்படங்களில் தோன்றி விட்டார்.

மலையாளத்தில் மற்றொரு சுப்பர் ஸ்டார் மோகன்லால். அவர் இதுவரை தமிழ்த்திரைப் படங்களில் தோன்றவில்லை. ஆனால் மொழி மாற்றம் செய்யப்பட்டு அவரது இரு படங்கள் வெளி வந்தன. அரசன், அசோகன்.

இப்போது ஒறிஜினல் தமிழ்த் திரைப்படத்தில் தோன்றப் போகிறார். வாய்ப்பை வழங்கி இருப்பது சாதாரண நிறுவனமல்ல. சிவாஜி பிலிம்ஸ். பிரபுவுடன் இணைந்து நடிக்கிறார் மோகன்லால். இருவல்லவர்களையும் வைத்து இயக்கப் போகிறார் ஆர். வி. உதயகுமார்.

திரைப்படத்தின் பெயர் ராஜகுமாரன். பிரபுவிற்கு இது நூறாவது படம்.

பி.கு- பிரபல தயாரிப்பாளர் பாலாஜியின் மகனான சுரேஷ் பாலாஜி தயாரிக்கும் தமிழ்த் திரைப்படமொன்றிலும் நடிக்க இருக்கிறார் மோகன்லால்.



மோகன்லால்



அமராவதி படத்தில் விசித்ரா

## ரோஜா நாயகனுக்கு மறுபடியும் ஹீரோ சான்ஸ்

தளபதி திரைப்படத்தில் தோன்றித் தனது அலட்டிக் கொள்ளாத நடிப்பால் ரசிகர்களைக் கவர்ந்தவர் அர்விந் ஸ்வாமி.

ரோஜா திரைப்படத்தின் நாயகனாகத் தோன்றித் தனது நயமான நடிப்பால் நம்மைக் கவர்ந்தவர்.

அர்விந்சுவாமிக்குப் படிக்கத்தான் ஆசை. பிரபல நடிகர்கள் மணிரத்தினத்தின் படத்தில் நடிக்கக் காத்திருக்கும் போது படிக்கும் ஆசையால் மணிரத்தினத்திடமிருந்து வந்த அழைப்பையும் படிப்பிற்காக நிராகரித்தவர்.

ஆனாலும், திரையுலகம் அவரை விடவில்லை. மறுபடியும் திரைப்படத்தில் பாலுமகேந்திராவின் வற்புறுத்தலால் நடித்தவருக்கு மீண்டுமொரு வாய்ப்பு. அவரைக் கதாநாயகனாக நடிக்க வைத்து, திரைக்கு சித்தயாராகிக் கொண்டிருக்கும் திரைப்படம் தாலாட்டு.

இதுவரைத் தோன்றிய பாத்திரங்களிலிருந்து தாலாட்டில் வித்தியாசமான பாத்திரம். கிராமத்து ஆளாகத் தோன்றும் அர்விந்த் ஸ்வாமிக்கு ஜோடியாக நடிக்கிறார் சுகன்யா. இசை- இளையராஜா.





## ஒரு நட்சத்திரத்தின் அஸ்தமனம்

ஹிந்தித் திரையுலகில் மற்றொரு ஸ்ரீதேவி ஆகும் திவ்ய பாரதியின் கனவு நனவாகும் நேரத்தில் மரணம் முந்தி விட்டது.

தமிழில் அவர் முதலில் தோன்றியது நிலாப்பெண்ணே படத்தில். அரவது இரண்டாவதும் இறுதியானதுமான தமிழ்த் திரைப்படம் இள நெஞ்சே வா.

தெலுங்கில் கவர்ச்சியை வாரி வழங்கிய திவ்ய பாரதிக்கு ஆண் நண்பர்கள் அதிகம் என்கிறார்கள் அவரை அறிந்தவர்கள்.

பத்தொன்பது வயதில் மாடியில் இருந்து விழுந்து மரணமாகி விட்ட திவ்யபாரதிக்கு 1992 மே பத்தில் தான் திருமணம் நடந்தது. அவர் இறப்பதற்கு ஒரு வாரத்தின் முன்னர் சிறந்த புது முக நடிகைக்கான ஃபிலிம் ஃபேயர் விருது அவருக்குக் கிடைத்தது. கவர்ச்சி உலகிற்கு திவ்யாவின் மரணம் இழப்புதான்.



திவ்யா

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



## புற்றுநோய் - மூட்டுவலி புதிய சிகிச்சை முறை

தீர்க்க முடியாதெனக் கருதப்பட்ட பல நோய்களைக் குணப்படுத்தக் கூடிய ஆய்வொன்று அமெரிக்காவில் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எலிகளுக்கு மனித உயிரணுக்களைப் புகுத்திப் பரிசோதனை நடத்திய போது பலகொடிய நோய்களைக் குணப்படுத்தும் சாத்தியக்கூறுகள் தென்பட்டதாக அவர்கள் அறிவித்தனர். அமெரிக்காவில் வெளியான அறிவியல் சஞ்சிகையான நேச்சர் (இயற்கை) இதழில் இத்தகவல் வெளியாகியிருக்கிறது. உயிர் மூலக்கூற்றின் மூலத்தை ஏற்றுக் கொள்ளத் தக்கதாக தயார் படுத்தப்பட்ட சுண்டெலிகளுக்கு மனித உயிர் மூலங்கள் செலுத்தப்பட்டு பரிசோதனை மேற்கொண்ட போது கிடைக்கப்பெற்ற முடிவுகள் மூட்டு வலி, புற்றுநோய் ஆகிய கொடிய நோய்களைக் குணப்படுத்துவதற்கான மருத்துவ முறையினைக் கண்டு பிடிப்பதற்கு வாய்ப்பினை தந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மார்புப்புற்று நோய் பற்றிய புதிய தகவல்கள்

மார்புப் புற்றுநோய் எல்லாப் பெண்களுக்கும் ஒரே மாதிரியான முறையில் ஏற்படுவதில்லை. வயதுக்கேற்றாற் போல நோயின் தன்மை மாறுபடுகிறது.ஒரு அறுபது வயதுப் பெண்ணுக்கு ஏற்படுவதைப் பார்க்கிலும் நாற்பது வயதுப் பெண்ணை இந்நோய் தாக்குவது குறைவு.

மார்புப்புற்று நோய்க்குரிய காரணிகள் சில:-

ஒரு பெண்ணுடைய தாய்க்கோ அல்லது சகோதரிக்கோ இந்நோய் இருந்தால் அப்பெண்ணையும் பாதிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இரு மார்பகங்களிலும் இந்நோய் தாக்குவதற்கான சூழ்நிலையும் இருக்கிறது.

பன்னிரெண்டு வயதிற்கு முன்னர் ஒரு பெண் பூப்பெய்துவது நடக்குமானால், அப்பெண்ணுக்கு மார்புப் புற்றுநோய் ஏற்படுவது இருபது சதவீதமாக இருக்கும். அதே போல் 55 வயதிற்குப் பின்னர் மாதவிடாய் கடைசியாக முடிவடைகின்றவர்களுக்கு இந்நோய் அதிகமாக ஏற்படக்கூடும்.

பதினெட்டு வயதில் முதல் குழந்தையைப் பெற்றெடுக்கும் பெண்ணை விட முப்பது வயதிற்கு மேல் குழந்தைபெறும் பெண்ணை இந்நோய் அதிகமாகப் பாதிக்கும். குழந்தையே பெறாத பெண்ணையும் பாதிக்கும் வாய்ப்பு இருக்கிறது.



கர்ப்பப்பை, சிறுநீர்க் குழாய், மற்றும் சுரப்பிகளில் ஏற்கெனவே புற்றுநோய் ஏற்பட்டிருந்தால் மீண்டும் இந்நோய் ஏற்பட **அதிக** வாய்ப்பு இருக்கிறது.

ஏற்கனவே ஒரு மார்பகத்தில் புற்றுநோய் ஏற்பட்டிருந்தால் அடுத்த மார்பகத்திலும் புற்று நோய் ஏற்பட ஐந்து மடங்கு சாத்தியமுண்டு.

உணவு முறைகளால் மார்புப் புற்றுநோய் ஏற்படக்கூடுமென்பதற்கான ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. ஆயினும் கொழுப்பு அதிகமாக உண்பவர்களுக்கு இந்நோய் ஏற்படும் சாத்தியம் உண்டென்று மருத்துவ வல்லுனர்கள் கருதுகிறார்கள்.

சாதாரண அளவு எடையுள்ள பெண்களை விட அதிக எடையுள்ள பெண்களுக்கு இந்நோய் ஏற்படும் வாய்ப்பு உண்டென்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

## இருதய நோய்க்கு மருந்தாகும் மரக்கறி வகைகள்

சில காய்கறிவகைகளை உண்பதனால் இருதயத்தைத் தாக்கும் நோய்கள் ஏற்படுவது குறையலாம் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

விட்டவின் ஏ சத்து அதிகமுள்ள கரட் மற்றும் பசளைக் கீரைகள் போன்றவற்றை உட்கொள்வதனால் இருதயக் கோளாறு போன்ற நோய்களின் தாக்கம் வெகுவாகக் குறைகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. நியூமெக்சிக்கோவில் நடைபெற்ற அமெரிக்க இருதய நோய் சங்க மாநாட்டில் இக்கருத்து தெரிவிக்கப்பட்டது.

பலருடைய உணவு முறைகளை ஆராய்ந்த போது இம் முடிவு எட்டப்பட்டதாக ,தெரிகிறது. இதற்காக 87,000 பெண்தாதிமாரின் உணவுப்பழக்கங்கள் பரிசீலிக்கப்பட்டன. ஒரு வாரத்தில் 5 தடவை அல்லது அதற்கு மேல் காரட் கிழங்கு உணவை உட்கொண்டவர்களுக்கு இருதயநோய்வரும் தன்மை, இதனை மாதத்துக்கு ஒரு தடவையோ அல் லது மிக குறைவாகவோ உட்கொள்வோரை விட, 68 சதவிகிதம் குறைவு எனக் காணப்பட்டது.

ஹேவார்டு மருத்துவப்பாளியைச் சேர்ந்த டாக்டர் ஆன் மான்சன், பசளைக்கீரை வைத்து நடாத்திய ஆராய்ச்சியின்படி, இக்கீரையும் இருதய நோயைவராமல் தடுக்கும் தன்மையைக் கொண்டது என்று தெரிவித்தார். இக்கீரையை மாதம் ஒரு தடவையோ அதற்கும் குறைவாகவோ உட்கொள்ளும் பெண்களைப் பார்க்கிலும் தினசரி உண்போருக்கு இருதய நோய்வரும் ஆற்றல் 4[illegible] சத விகிதமாகக் குறையக்கூடிய வாய்ப்புண்டு என்று தெரிக்கப்பட் டுள்ளது.

## கத்தரிக்காயும் மருந்தாகும்

கத்தரிக்காயை நாம் சுலபமாக எண்ணிவிடக்கூடாது. அந்தக்காலச் சித்தர்கள் இயற்கை வைத்தியத்தில் கைதேர்ந்த வித்தகர்கள். சித்தர்களின் பாடல்களில் கத்தரிக்காய் பத்தியக்கறி என்று பாராட்டப்பட்டிருக்கிறது.

தினமும் கத்தரிக்காய் சாப்பிட்டால் கூட கெடுதல் விளையாது. அனால் சரும நோய் உள்ளவகள் கத்தரிக்காய் கறியை நினைத்தும் பார்க்கக் கூடாது.

ஆஸ்த்துமா, ஈரல்நோய், சம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் கத்தரிக்காய் உண்பதால் வலிமை ஏற்படும். கத்தரிக்காய் உடலுக்குச் சூடினைக் கொடுக்கிறது. பித்தம், கபம், ஆகியவற்றைத் தணித்து வாயுவையும் வெளியேற்றுகிறது.

கத்தரிக்காயில் விசேசமானது குள்ளக் கத்தரிக்காய். மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது என்னும் பழமொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பத்தியக் கறியாக நோயாளிகளுக்கு உதவுகிறது. ஆண்மைக் குறைபாடுகளைக் களைந்து விடுகிறது. அதுதான் சில திருமணச் சடங்குகளில் மணமக்களுக்குரிய உணவாக கத்தரிக்காய் சமைத்து வழங்கும் பழக்கம் நிலவுகிறது.

கத்தரிக்காயை வற்றல் போல செய்துகொண்டு அவ்வப்போது நல்லெண்ணையில் பொரித்து உண்ணலாம். உடலுக்குத் தேவையான சூடு கிடைக்கும்.

கருத்தடை மாத்திரைகளை பாவிப்பதனால் மார்பகப் புற்றுநோய் ஏற்படுமா என்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குழப்பமான முடிவுகளையே தந்துள்ளன. எனினும் கருத்தடைக்கான புதிய மாத்திரைகள் பாதுகாப்பானது என்றே கருதப்படுகிறது.

### உப்பினால் ஏற்படும் பயன்கள்

- வீட்டைக் கழுவும் போது தண்ணீரில் சிறிது உப்பினைக் கலந்து கழுவி விட்டால், அதற்குப் பிறகு தரையில் எந்தப் பூச்சியும் வந்து இருக்காது.
- நீண்ட தூரம் நடந்து கால்கள் களைப்படைந்திருந்தால் உப்புக் கலந்த வெது வெதுப்பான நீரில் காலை சிறிது நேரம் நனைக்க வேண்டும். சோர்வு பறந்து விடும்.
- துணியில் இரத்தக்கறை படிந்திருந்தால், உப்பு நீரில் துணியை அலசுங்கள். கறை காணாமல் போய்விடும்.
- இரும்பு துருப்பிடித்தால் உப்பைக் கொண்டு அதன் மீது தேயுங்கள். துரு தொலைந்து போகும்.
- குழந்தைகளை குளிப்பாட்டும் போது தண்ணீரில் டெட்டோல் கலப்பதுடன், சிறிது உப்புத் தூளையும் கலந்து விடுங்கள். குழந்தைகளுக்கு தோல் வியாதி என்ற தொல்லையே ஏற்படாது.

### கொல்லுவதும் ஒரு நீதி!

நோயின்கொடுமை-உபாதை தாங்கமுடியாதவர்கள் பலர் தற்கொலை செய்துகொள்வதை அறிவோம். தற்கொலை சட்ட விரோதமானது. தற்கொலை முயற்சியிலீடுபடும் போது பிடிபட்டால் நீதிமன்றத்தில் விதிக்கும் தண்டனையை ஏற்கத் தயாராக இருக்க வேண்டும். இதே போல தற்கொலைக்குத் தூண்டுபவரும் உதவி செய்பவரும் கூட குற்றவாளியே.

அமெரிக்காவில் டாக்டர் ஜாக்கெவோக்கியன் 12 பேர் தற்கொலை செய்வதற்கு துணை புரிந்திருக்கின்றார். உண்மைதான்! உயிர்களைக் காக்க வேண்டிய டாக்டரே உயிர்களைப் போக்கடிக்க உறுதுணை புரிந்திருக்கிறார். ஒருவர் இரண்டு பேரல்ல. இவரால் தற்கொலை புரிந்து கொண்டவர்கள் மொத்தம் 12 பேர். இதற்காக இவர்மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டு நீதி விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதே வேளை நெதர்லாந்தில் இத்தகைய தற்கொலைகளுக்கு உறுதுணை புரிபவர்கள் குற்றவாளிகளல்லர் என்று சட்டமியற்றப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாறு தற்கொலைக்கு ஒத்தாசை புரியும் ஒரு மருத்துவர் மற்றுமொரு மருத்துவரின் ஆலோசனையைப் பெறவேண்டும். அதுமட்டுமல்லாமல் தற்கொலை செய்து கொள்பவர் ஒரு மனநோயாளியாக இருத்தலாகாது. தான் மனதார விரும்பியே தற்கொலை செய்ய முற்பட்டதாக அவர் எழுத்து மூலம் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

வீட்டில் மனைவியோடு சண்டைபோட்டுக் கொண்டு தற்கொலைக்கு முன்வருவோர், வறுமைப்பிணியிலிருந்து மீழ வழியில்லை என்று தற்கொலையை நாடுவோர் ஆகியோர் தங்கள் தற்கொலை முயற்சிக்கு உதவி புரியுமாறு அருகிலிருக்கும் மருத்துவரை நாட முடியாது. மருத்துவ முயற்சிகள் எதுவும் பயன்படமாட்டாது என்ற முடிவெடுக்கப்பட்டு தீராத துன்பத்தால் துயருறும் ஒருவர் தன்னை கொடிய உபாதைகளிலிருந்து விடுபட தற்கொலை செய்து கொள்ளலாம். அதற்கு அவருடைய மருத்துவர் உதவி ஒத்தாசைகளைப் புரியலாம். இதற்கு ஏற்ற சட்டமூலம் ஒன்று (இங்கல்ல) நெதர்லாந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனைக் "கருணைக் கொலை" என்று சொல்கிறார்கள்.

## சமைப்போம் சுவைப்போம்

### ஆக்கித் தருபவர் அன்ன பூர்ணா




பட்டாணியில் எது செய்வதாக இருந்தாலும் முதல்நாள் இரவே பட்டாணிகளை ஊற வைக்க வேண்டும். பலர் ஊற வைக்க மறந்து விடுவார்கள். அவசரத்திற்குப் பட்டாணி போட்டு செய்ய வேண்டிய பண்டத்தில் பட்டாணி போடாமலேயே செய்ய வேண்டிய நிலை. இப்படி ஒரு சந்தர்ப்பம் உங்களுக்கு இனி ஏற்பட்டால் கவலையே இல்லை. கொதிக்க நீர் காய்ச்சுங்கள். இதில் ஒரு சிட்டிகை உப்பு, ஒரு சிட்டிகை சமையல் சோடா போடுங்கள். பிளாஸ்கில் இந்த நீரை ஊற்றிவிட்டுப் பட்டாணியை அதில் போட்டு விடுங்கள். பிளாஸ்கை மூடி இரண்டு மணி கழித்து எடுத்தால் முதல் நாள் இரவு ஊறவைத்த பட்டாணி போல நன்றாக வெந்துவிடும். பட்டாணியின் அளவுக்கு ஏற்றபடி நீரின் கொதி நிலையையும், சோடாவின் அளவையும் மாற்றிக் கொள்ளவும். இனி பட்டாணியை ஊற வைக்க மறந்ததற்காகத் தலையில் குட்டிக்கொள்ள வேண்டாமே!



### உருளைக் கிழக்கு பச்சடி


பெரிய உருளைக்கிழங்கு இரண்டைக் குக்கரில் வேகவைத்து மேல் நீக்கிவிட்டு, கிழங்கை ஒரு பாத்திரத்தில் போட்டு மசித்துக் கொள்ள வேண்டும்.பின்பு பச்சை மிளகாய், தேங்காய், இஞ்சி இவற்றை நன்றாக இஅரத்துக் கிழங்கில் போட்டு நல்ல கெட்டித் தயிர் 1 1/2கப் ஊற்றி உப்பு சேர்த்துக் கலந்தபின் கடுகு, பெருங்காயம் தாளித்துக் கறிவேப்பிலை, கொத்துமல்லி போட்டால் சாம்பாருக்குச் சரியான சவால்இந்தப் பச்சடி.

மேலும் பல சுவையான சமையல் துணுக்குகளோடு அடுத்த இதழில் சந்திப்போம்.



பல சகோதரிகள் இட்லிக்கு 'கொர கொர'வென அரைக்க வேண்டும் என்று நினைத்திருக்கிறார்கள். அந்தக் காலத்தில் கிரைண்டர் இல்லை. கையால் கஷ்டப்பட்டு அரைக்கும் போது, இட்லிக்குத் தானேகொர,கொரவென அரைத்தால் போதும் என்றார்கள். ஆனால் கிரைண்டர் வந்தபின், 'கொர,கொர' ஐடியாவைக் கைவிடுங்கள். வெண்ணை போல் மாவை அரையுங்கள். அரிசி: உளுந்து 4:1 என்ற அளவில் ஊறப் போட்டுநன்றாக அரிசியை அரைத்துக் கலக்கி இட்லிசெய்யுங்கள். 1கிலோ அதிகமாகக் கிடைக்கும். இட்லியும் மல்லிகைப் பூ போல மிருதுவாக இருக்கும்.

# புத்திசாலி யானைகள்



பூமியில் வாழும் விலங்குகளில் மிகவும் புத்திசாலியானது யானை ஆகும். சிங்கம் தான் காட்டுக்கு ராஜாவாக இருக்கிறது. ஆனால் சிங்கம் யானையைப் போல துணிச்சலானது என்று சொல்ல முடியாது. யானை சுறுசுறுப்பானது. பெருந்தன்மையானது.

யானையிடம் நீங்கள் அன்பு காட்டினால் அதனை எப்போதும் யானை மறப்பதில்லை. பத்து இருபது ஆண்டுகள் சந்திக்காமல் இருந்தாலும் உங்களை அடையாளம் கண்டு சந்தோசப்படும்.

மனிதர்களைப் போலவே யானைகளும் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்கின்றன. யானை 22 மாதங்கள் கருவைச் சுமக்கிறது.

நாலு கோடி ஆண்டுகளுக்கு முன் நைல் நதிக்கரைகளில் மெயெரித்திரியம் என்ற விலங்கு தோன்றியது. அது ஒரு பன்றியின் அளவில் இருந்தது. அதில் இருந்து இன்றைய யானைகள் உருவாகியதாகச் சொல்லுகிறார்கள்.

மணிக்கு நாற்பது கிலோ மீற்றர் வேகத்தில் யானைகளால் ஓட முடியும்.

யானைகள் தமது தந்தங்களைக் கொண்டு பல தொழில்களைச் செய்கின்றன. மண்ணைத் தோண்டுகின்றன. எதிரிகளுடன் சண்டை இடுகின்றன. கனமான பொருட்களைத் தூக்கிச் செல்லுகின்றன. பெரிய நீர்நிலைகளைக் கடக்கும் போது தமது குட்டிகளைத் தந்தங்களில் சுமந்து செல்கின்றன.

தந்தங்கள் சில நேரங்களில் உடைந்துவிடும். அதனால் யானைகளுக்குப் பாதகம் இல்லை. தும்பிக்கை தான் முக்கியமானது. தும்பிக்கைக்ள் மூலமாக யானைகள் சுவாசிக்கின்றன, நீரை உறிஞ்சி எடுத்துவாய்க்குள் பீய்ச்சிக் குடிக்கின்றன. தழைகளையும், கிளைகளையும் ஒடித்து வாயில் போட்டுக் கொள்ளுகின்றன. அதுமட்டுமல்ல சேற்றைவாரித் தமது முதுகில் போட்டுக் கொள்ளவும் தும்பிக்கைகளைப் பயன்படுத்துகின்றன.

யானைகள் தமக்குள் பேசிக் கொள்ளும் திறன் வாய்ந்தவை. முனகல்கள் மூலமாகவும், உரக்கப் பிளிறுதல் மற்றும் பலவித ஓசைகள் மூலமாகச் செய்திகளைப் பரிமாறிக் கொள்கின்றன.

தாய் யானை தன் குட்டியைக் கொஞ்சுவது அற்புதமான காட்சியாக இருக்கும். உறவினர்களையும், நண்பர்களையும், சந்திக்கும் போது தும்பிக்கைகளைக் கோர்த்துக் கொண்டு குரல் எழுப்புகின்றன.

நோயுற்ற யானைகளுக்கு சக யானைகள் உணவையும், நீரையும் எடுத்து வந்து ஊட்டும். நோயுற்ற யானைகளைத் தடவிக் கொடுத்து ஆறுதல் படுத்தும்.

யானைகள் ஆதிகாலத்திலிருந்தே மனிதர்களுக்கும் சேவகம் செய்து வருகின்றன. ■

# பூனை செய்த முடிவு



ஒரு பூனை பலம் வாய்ந்த சிநேகிதனைத் தேடிப் புறப்பட்டது.

"சிங்கம் தான் மிருகங்களில் பலம் வாய்ந்தது. சிங்கம்தான் காட்டுக்கு ராஜா. சிங்கத்துடன் சிநேகம் வைத்துக் கொண்டால் தான் நமக்கு ஒரு கௌரவமாக இருக்கும். பாதுகாப்பும் கிடைக்கும்". என்று நினைத்தது. பின்னர் காட்டுக்குச் சென்ற பூனை சிங்கத்தோடு சிநேகிதம் வைத்துக் கொண்டது.

ஒரு நாள் பூனையும் அதன் கூட்டாளியான சிங்கமும் காட்டில் உலாவிக் கொண்டிருந்தன. அப்போது ஒரு யானை அவற்றின் முன்னால் வந்து நின்றது. சிங்கம் யானை மீது பாய்ந்தது. பயங்கரமான சண்டை. சண்டையில் யானை சிங்கத்தைக் கொன்று விட்டது.

பூனைக்கு ஆச்சரியமாக இருந்தது.

"நாம் நினைத்தது தவறாகி விடடது. யானைதான் பலசாலி". என்று எண்ணியபடி யானையோடு சிநேகம் செய்து கொண்டது.

யானையும், பூனையும் ஒரு நாள் காட்டில் சென்று கொண்டிருந்த போது வழியில் ஒரு வேடன் வந்து கொண்டிருந்தான். யானையைக் கண்டதும் அவன் தன் வில்லை வளைத்து அம்பை எய்தான். யானை மடிந்து போனது.

பூனைக்கு மறுபடியும் ஏமாற்றம் ஏற்பட்டது. "ஒஹோ யானையை விடவும் பலசாலி இருக்கிறான் போல் இருக்கிறது" என்று நினைத்தது. உடனே வேடனிடம் சென்று,

"உனது நட்பு எனக்கு வேண்டும்.என்னையும் உன் வீட்டுக்கு அழைத்துச் செல்ல முடியுமா"? என்று கேட்டது. அதற்கு வேடன்,

"அதற்கென்ன அழைத்துச் செல்லுகிறேன்" என்று தன்னோடு பூனையை அழைத்துச் சென்றான்.

வீட்டுக்குப் போனதும் பூனையைக் கண்ட வேடனது மனைவிக்கு ஒரே ஆச்சரியம். ஆச்சரியமாகப் பூனையைப் பார்த்துக் கொண்டே வேடனிடம் இருந்து அம்பையும், வில்லையும் வாங்கி உள்ளே வைத்தாள்.

"வேடனின் மனைவி தான் பலசாலி போல் இருக்கிறது. வேடனின் அம்பையும் வில்லையும் பிடுங்கிக் கொண்டு போகிறாளே"என்று நினைத்தது.


வேடன் சாப்பிட உட்கார்ந்தான். அவன் மனைவி சாப்பாடு எடுத்து வரச் சமையல் அறைக்குள் சென்றாள். பூனையும் அவள் பின்னால் சென்றது. இனி அவளோடு தான் இருப்பது என்று முடிவு செய்தது.

அதுதான் பூனை இப்போதும் அடுப்பங்கரையைச் சுற்றி சுற்றி வருகிறது.

(ஆபிரிக்க நாட்டு சிறுவர் கதை)

## நவீன மியூசியம்

மியூசியத்துக்கோ அல்லது கண்காட்சிகளுக்கோ சென்றால் இரண்டு கட்டளைகள் குழந்தைகளைப் பயமுறுத்தும். ஒன்று எதையும் தொடாதீர்கள். மற்றொன்று சத்தம் போடாதீர்கள்.



அவ்வாறான கட்டளைகள் குழந்தைகளின் உற்சாகத்தை போக்கடித்துவிடும் என்று அமெரிக்காவில் உள்ள மியூசியம் ஒன்று புதிய கட்டளையை வெளியிட்டு இருக்கிறது. தயவுசெய்து தொட்டுப்பாருங்கள் என்பது தான் அது. அதுமட்டுமல்ல, அங்கு மனம்விட்டு பேசவும் முடியும். அமெரிக்காவில் உள்ள இண்டியனா பொலிஸ் மாநிலத்தில் அந்த நவீன மியூசியம் இருக்கிறது.

# பெண்கள் நம்பும் அழகு மாயைகள்



முகப்பயிற்சிகள் செய்வது முகத்தில் சுருக்கம் விழுவதை தடுக்கும் என்பது தவறான அபிப்பிராயம். பயிற்சிகள் மேல் தோலில் எந்த மாற்றத்தையும் கொண்டுவராது. அடியில் இருக்கும் தசைகளுக்கு மட்டுமே வலுவளிக்கும். எப்படியானாலும் பேசும் போது, சிரிக்கும் போது, சாப்பிடும் போது முகத் தசைகளுக்குப் பயிற்சி கிடைக்கிறது.

எண்ணெய் தேய்த்து மசாஜ் செய்தால் அடிவயிற்றில் உள்ள பிரசவ வலிகள் நீங்கும் என்று கூறப்படுவது உண்மையல்ல. அதற்கெந்த வைத்தியமும் கிடையாது. காலம் தான் அதை சரியாக்கும். கொஞ்சம்கொஞ்சமாக மறையுமே அன்றி முற்றிலும் போய்விடாது.

உடற்பயிற்சி செய்தால் மார்பகங்கள் வளருமா? வளராது. உடற்பயிற்சி தசைகளை மட்டுமே வலுவாக்கும். நீங்கள் உடற்பயிற்சி செய்யும்போது மார்பகங்களுக்குக் கீழ் உள்ள தசைகளும் முதுகுத்தசைகளும் வலு அடையுமே தவிர மார்பகங்கள் பெரிதாகாது. ஏனெனில் மார்பகங்களில் தசைகள் கிடையாது.

அடிக்கடி முடியை வாருவது நல்லதென்ற கருத்தும் இருக்கிறது. ஆனால் அதிகமாய் வாருவது முடிக்கு நல்லதல்ல.

ஒரு வெள்ளை முடியைப் பிடுங்கினால் இரண்டாய் முளைக்கும் என்று சில பெண்கள் பயப்படுகிறார்கள். அது தவறு. மீண்டும் ஒரு வெள்ளை முடிதான் முளைக்கும்.

தொடர்ந்து வெட்டிக் கொள்வதால் முடி வேகமாய் வளரும் என்கின்ற எண்ணமும் தவறானது. முடிக்கு உயிர் கிடையாது. அதனால் தலையின் மேல்பாகத்தில் என்ன செய்தாலும் அது முடியைப் பாதிக்காது. சிலருக்கு மாதத்திற்கு அரை அங்குலம் முடி வளருகிறது. வேறு சிலருக்கு கொஞ்சம் அதிகமாக வளரலாம்.

உடற்பயிற்சி செய்வதால் கொழுப்பு வியர்வையாக வெளியேறுகிறது என்ற கருத்து தவறானது. உடற்பயிற்சி தசைகளை வலுவாக்குவதோடு கலோரிகளையும் எரிக்கிறது. இது உடலைக் குறைக்க நினைப்பவர்களுக்கு தேவையானது பயிற்சிக்குப் பின் வடியும் நீர் தண்ணீரே தவிர கொழுப்பல்ல மீண்டும் தண்ணீர் குடித்தால் சரியாகிவிடும். -துளசி-

# லேடீஸ் ஸ்பெசல்

## எப்படித் தாக்குவது?

ஒரு பெண் தாக்கப்படும்போது எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று கிராண்ட்மாஸ்டர் கிம் அறிவுரை பகர்கிறார்:

உங்களைத் தாக்க வருபவனின் விதைகளைக் குறிவைத்து உதைக்க வேண்டாம். இதுவே சிறந்த இலக்கு என பெரும்பாலான பெண்கள் தவறாகக் கருதுகின்றனர். இந்த நிலையத்தில் தான் தாக்குதல் முதலில் விழும் என்று ஆண்கள் கருதி அதற்கான முன்னெச்சரிக்கையுடன் இருப்பர். இதில் நீங்கள் தவறிவிட்டால் அவன் கொடூரமானவனாகிவிடுவான். உங்களை நிர்மூலமாக்கி அவன் தன் முழு பலத்தையும் பாவித்து விடுவான்.

உங்கள் பலம் முழுவதையும் திரட்டி உங்கள் கைக்கு சக்தி ஊட்டுங்கள். உறுதியான உங்கள் இரு விரல்களால் அவனுடைய குரல் வளைக்குச் சற்றுக் கீழே குத்தி விடுங்கள்.


அவன் இத்தாக்குதலினால் செயலிழந்ததும் வேண்டுமானால் விதைகளில் தாக்கலாம்.

முக்கியமான ஒன்று. ஒரு பெண் தெருவில் நடந்து செல்லும் போது நிமிர்ந்து நடக்க வேண்டும். அவள் உறுதியானவள் என்ற எண்ணம் பார்ப்போர் மனதில் தோன்ற வேண்டும். அச்சத்தைக் காட்டும் பெண் ஒரு கெட்டவனுக்கு வாய்ப்பான குறியாகத் தென்படுகிறது.




## வீட்டுக் குறிப்பு

வீட்டினுள் அழகுக்காக வைக்கப்படும் செடிகளை அவ்வப்போது வித விதமாக மாற்றிக் கொண்டே இருங்கள். அன்னாசிப்பழம் வாங்கும் போது, இலையுடன் வாங்கி வந்து, இலைப் பகுதியை தனியாக எடுத்து அப்படியே ஒரு தொட்டியில் வைத்து விடுங்கள். பார்க்க அழகாக, வித்தியாசமாக இருக்கும். அப்படியே வளர விட்டீர்களானால் அன்னாசி பழமும் கிடைக்கும்!



மல்லிகை, பவள மல்லிகை, ரோஜா என்று எந்த வாசனை மலர்களாக இருந்தாலும் சரி, தேவைக்கு தொடுத்தது போக மீதி இருப்பதை தூக்கியெறிந்து விடாதீர்கள். ஒரு அகலமான கிண்ணத்தில் போட்டு வரவேற்பறையிலோ, ஹாலிலோ வைத்து விடுங்கள். வாசனை கம கமவென்று இருக்கும்.



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# நெருக்கடியில் நெல்சன் மண்டேலா

## இளம் சிங்கங்கள் பாயத் துடிக்கின்றன

ஆயுதப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று தென் ஆபிரிக்காவின் கறுப்பு இன மக்கள் மத்தியில் உள்ள இளைஞர் குழுக்கள் விரும்புகின்றன.

தென் ஆபிரிக்காவின் வெள்ளையர் அரசாங்கம் நிறவெறிக் கொள்கையைக் கைவிட்டதைத் தொடர்ந்து 1990ம் ஆண்டு தென் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் ஆயுதப் போராட்டத்தை நிறுத்திக் கொண்டது.

கறுப்பு இனமக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டது தென் ஆபிரிக்கா. அங்கு சிறுபான்மையினரான வெள்ளையர் ஆட்சியே நடைபெற்று வருகிறது.

கடந்த மார்ச் மாதம் ஆளும் கட்சியும், தென் ஆபிரிக்க தேசிய காங்கிரசும் மாநாடொன்றை நடத்தின. அங்கு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்படி, தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் ஐந்து வருடங்களுக்கு இடைக்கால அரசு ஒன்று நிறுவப்படும். அதன் பின்னர் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

தென் ஆபிரிக்காவில் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படுமானால் கறுப்பு இன மக்களிடமே சகல அதிகாரங்களையும் ஒப்படைக்கவேண்டி ஏற்படும். அதனை வெள்ளையர் ஆட்சி விரும்பவில்லை.

இடைக்கால அரசில் இரு இனத்தவர்களும் அங்கம் வகிப்பார்கள். அதிலே வெள்ளையர்கள் தான் அதிகமாக இருப்பார்கள். ஆபிரிக்க தேசிய காங்கிரசின் இளைஞர் அமைப்பு இடைக்கால ஆட்சித் திட்டத்தை நிராகரித்து விட்டது. பல இளைஞர்கள்பிரிந்து சென்று பரந்த ஆபிரிக்கானிச காங்கிரசில் சேர்ந்துவிட்டனர். வன்முறைப் போராட்டத்திற்கான அறைகூவல்கள் கேட்ட வண்ணம் இருக்கின்றன.

அண்மையில் கறுப்பு இனத் தலைவர்களில் ஒருவரான கிறிஸ்ஹானி வெள்ளையர்களால் கொலை செய்யப்பட்டதை அடுத்து கறுப்பின இளைஞர்கள் சீற்றம் அடைந்தனர். நெல்சன் மண்டேலாவின் வேண்டுகோளையும் மீறி யுத்தம் யுத்தம் யுத்தம் என்று



முழங்கியபடி வீதிகளில் இறங்கினார்கள்.

மோதல்கள் வெடித்தன கலவரங்களும் நடந்தன. பதினேழு பேர் மாண்டனர் பலர் படுகாயம் அடைந்தனர்

74 வயதுடைய நெல்சன் மண்டேலாவுக்கு இன்னொரு சவால் அவரது முன்னாள் துணைவியார் வின்னி. வன்முறையில் நாட்டம் கொண்டவர்களோடு வின்னி கூட்டுச் சேர்ந்திருக்கிறார். மற்றும் ஒருசவால் கறுப்புஇன இளைஞர் மொக்காபா.

இளம் சிங்கங்களை மண்டேலா தொடர்ந்தும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது கடினம் என்றே கருதப்படுகிறது. வெள்ளையர்கள் விரும்புவது போல் படிப்படியான ஆனால நீண்டகால இழுத்தடிப்பின் பின்னரான மாற்றத்திற்கு கறுப்பு இன இளைஞர்கள் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை.

## கியூபாவால் சுமக்க முடியுமா?



உலகில் சோசலிசத்தின் தாய்வீடாக இருந்த சோவியத் யூனியனின் சிதைவுக்குப் பின்னரும் கியூபா சோசலிசப் பாதையில் இருந்து விலகுவதாக இல்லை.

கியூபாவில் மேற்கொள்ளப் பட்டுவரும் இராணுவச் செலவீனம் அந்நாட்டின் பொருளாதாரத்தில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்திவருகிறது. அது கியூபாவின் தலைவர் பிடல்காஸ்ரோவின் உறுதிக்கு ஒரு சோதனையாக அமைந்துள்ளது.

## மா ஓ வின் தேசத்தில் மனித உரிமை இல்லையா?



சீன தேசத்தின் பெருந்தலைவர் மா ஓ சேதுங் இருந்த போதும் சரி, அவர் மறைந்து பல்லாண்டுகள் கழிந்துவிட்ட இப்போதும் சரி அங்கு நடப்பவை அனைத்தும் மர்மமாகவே இருந்து வருகின்றன.

சீனாவில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையையும், தொழில் அடிமை முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை பற்றியும் தமக்கு அறிவிக்கும்படி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பு வற்புறுத்தி இருக்கிறது. மன்னிப்புச்சபை ஆய்வாளரின் கூற்றுப் படி இரண்டாயிரம் பேர் வரை அங்கு மரண தண்டணைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

குற்றச்சாட்டுக்களை சீனா மறுத்திருக்கிறது. எம்மிடம் அரசியல் கைதிகள் எவரும் இல்லை. ஒரு வேளை புரட்சியின் எதிரிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று கூறுகிறது சீனா.

## உலக ரவுண்டப்

# முஸ்லிம் மின்டானோ கலவரங்கள்

## யுத்தம் மூளுமா?



பிலிப்பைன்ஸ் நாட்டின் தென்புறத்தே உள்ள மின்டானோ முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பரந்த பிரேதசம் ஆகும். அது இயற்கை வளங்கள் நிறைந்த தீவை உள்ளடக்கியது.

கடந்த ஆகஸ்ட் மாதம் பிலிப்பைன்ஸில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பிடல் ராமோஸ் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவர் வெற்றி பெறுவதற்கு முன்னர் மின்டானோ பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக், கூட்டங்களில் கலந்து கொண்டார். மின்டானோவை பொருளாதார வளம் பெருக்கும்மையமாக மாற்றுவேன் என்று அந்தக் கூட்டங்களில் அவர் அறிவித்தார்.

வெற்றி பெற்ற பின் அவர் வாக்குறுதிகளை நிறைவேற்றினார். அங்கு விமான நிலையம் அமைக்கப்பட்டது. நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டன, பிறநாட்டு முதலீட்டாளர்கள் தொழிற்களை ஆரம்பித்தனர்.


ஆயினும் அங்கு அமைதி குலைந்து விட்டது. கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், குண்டு வீச்சு அத்தனையும் இங்கு கட்டுக்கடங்காமல் சென்று விட்டன. அதனால் ஜனாதிபதி ராமோஸ் பாதுகாப்புப்படைகளை அங்கு அனுப்பி வைத்தார்.

மின்டானோ பிரதேசத்தைத் தனிநாடாகப் பிரகடனம் செய்ய வேண்டுமென்று கிளர்ச்சியாளர்கள் கூறி வருகின்றனர். மொரோ தேசிய விடுதலை முன்னணி என்னும் இயக்கம் ஆரம்பத்தில் இருந்தது. பின்னர் அதிலிருந்து பிரிந்து மொரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி உருவாகியது. அந்த இரண்டு அமைப்புக்களிலும் மொத்தம் இருபத்தோராயிரம் உறுப்பினர்கள் இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது. இது நம்நாட்டில் பிரிவினை கோரும் புலிகளை விடப் பலமடங்கு அதிகமாகும்.

1972ம் ஆண்டு பிலிப்பைன்ஸின் முன்னாள் அதிபர் மார்கோஸ் மார்ஷல்லோ எனப்படுகின்ற கண்டதும் சுடும் சட்டத்தைப் பிரகடனம் செய்தார். அதனைத் தொடர்ந்து தான் தீவிரவாத இயக்கங்கள் உருவாகத் தொடங்கின. இதுவரை அங்கு நடைபெற்ற போராட்டத்தில் பத்தாயிரம் பேர் வரை மாண்டுள்ளனர்.

தற்போது கிளர்ச்சியாளர்களுக்கு அங்கு ஆதரவு குறைந்து இருக்கிறது. கடந்த மார்ச் மாதம் 25ம் திகதி மின்டானோ பிரேதசத்தில் ஒரு தேர்தல் நடைபெற்றது. அந்தப் பிரேதசத்திற்கு ஒரு உதவி ஆளுனர், மற்றும் இருபத்தொரு சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைத் தெரிவு செய்யவே அந்தத் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலைப் புறக்கணிக்கும்படி தீவிரவாதிகள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் பத்துலட்சம் வாக்காளர்களில் எண்பது சதவீதமானோர் அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

எப்படி இருந்த போதிலும் இரண்டாயிரமாவது ஆண்டில் தனது நாட்டைத் தொழில் வளம் நிறைந்த நாடாக மாற்றுவதற்கு முயன்று வரும் ஜனாதிபதி ராமோஸிற்கு மின்டானோ தீவிரவாதிகள் புதிய சவால்களை உருவாக்கக் கூடும்.



சண்டையிடும் பிலிப்பியர்கள்

| அமைப்புக்கள் | வீராகள் | ஆயுதங்கள் |
|---|---|---|
| பிலிப்பைன்ஸ் ஆயுதப் படையினர் | 122,177 | 122,177 |
| பிலிப்பைன்ஸ் தேசியப் பொலிஸ் | 97,527 | 90,000 |
| குடிமக்கள் ஆயுதப் படையினர் புவியியல் ரீதியான பிரிவுகள் | 74,587 | 50,000 |
| மோறோ தேசிய விடுதலை முன்னணியும் மோறோ இஸ்லாமிய விடுதலை முன்னணியும் | 21,320 | 13,360 |
| புதிய மக்களின் படை (பிலிப்பைன்ஸ் கொம்யூனிஸ்ட் கட்சி) | 11,920 | 8,730 |
| குற்றவாளிகளின் குழுக்கள் | 6,125 | 1,975 |



## யெல்ட்ஸினின் அதிரடி மாற்றம்




ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்ஸின் தனது அரசில் தொடர்ந்து மாற்றங்களைச் செய்து வருகிறார். கடந்த மாதம் 25ம் திகதி கருத்துக் கணிப்பில் வெற்றி அடைந்த பிறகு தன் அரசில் உள்ள எதிர்ப்பாளர்களைக் களை எடுக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள் ளார். தனது தலைக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவர் என்று கருதப்பட்ட பாதுகாப்பு ஆலோசகர் யூரிஸ் கோகோவ் என்பவரது பதவியையும் அவர் பறித்திருக்கிறார்.

## சபாஷ் இந்தியா

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சர் இந்தியா ஜனநாயகத்தை ஒரு பொக்கிஷத்தைப் போல் பாதுகாத்து வருகிறது என்று பாராட்டியுள்ளார். உயிரே போனாலும் ஜனநாயகப் பாதையில் இருந்து வேறு பாதைக்குத் திரும்ப மாட்டோமென்று இந்திய மக்கள் உறுதிகாட்டி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## உள்நோக்கம் கொண்ட உதவி

### ஈராக் கூறுகிறது



ஈராக்கிற்கு உதவி செய்வதாகக் கூறிக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபை அங்குள்ள குர்திஷ்தான் கிளர்ச்சியாளர்களுக்கு உதவி செய்வதாக ஈராக் குற்றம் சாட்டி இருக்கிறது.

ஈராக்கின் வட பகுதியில் உள்ள குர்திய கிளர்ச்சியாளர்கள் தங்கள் பிராந்தியத்திற்கென தனி ஆட்சி ஒன்றை ஏற்படுத்தியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் இணைப்பாளர் மொகம்மது செச்சாரி கூறியுள்ளார்.

# கிளி போல் பேசலாம், குயில் போல் பாடலாம் அதற்கு என்ன செய்யலாம்?

அமெரிக்காவில் அண்மையில் ஒரு ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். குரல் ஆராய்ச்சி ஒவ்வொருவர் வெற்றிக்கும் அவரவருடைய குரலின் தன்மை நாற்பது சதவீதம் காரணமென்று அந்த ஆராய்ச்சி தெரிவிக்கிறது.



பிரபலமும், மக்கள் பலமும் பெற்ற அரசியல் தலைவர்கள் பலரது வெற்றிக்கு அவர்களது குரலும் ஒரு முக்கிய காரணமாக இருந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் அமரர் அறிஞர் அண்ணாத்துரை தனது வித்தியாசமான கரகர குரல் வளத்தால் அனைவரையும் கவர்ந்தவர். நம் நாட்டில் கூடப் பலர் பொதுக் கூட்டங்களில் அவரது குரலில் பேச முயற்சித்ததுண்டு.

போர்க்களத்தில் உத்தரவிடுவதற்கு ஆளுமை கலந்த உறுதியான குரல் தேவை.

அனைவரையும் கவர்வதற்கு இனிமையாகப் பேசுகின்ற முறை தேவை.

இடம், சூழல் என்பவற்றிற்கேற்ப வித்தியாசமான குரல்களுக்கு வித்தியாசமான முக்கியத்துவங்கள் இருக்கின்றன. அது போலவே ஆளுக்கு ஆள் குரலும் வித்தியாசப்படுகின்றது.

சிவாஜி போல் பேச வேண்டும். பாலசுப்பிரமணியத்தைப் போல் பாடவேண்டும். சித்ராவைப் போல் பாட வேண்டும். என்றெல்லாம் பலர் முயற்சி செய்வதைப் பார்க்கிறோம். அவ்வாறு முடியா விட்டாலும் கூட எல்லோராலும் செய்யக்கூடிய எளிமையான பயிற்சிகள் மூலம் நமது குரலையும் திறமையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

காலையில் எழுந்து கழுத்தளவு தண்ணீரில் நின்று கொண்டு வாயில்.... மன்னிக்க வேண்டும்! இதெல்லாம் தேவையில்லை. மேற்படி சமாச்சாரத்தை மேடைக் கச்சேரிகள் நடத்தும் வித்துவான்களிடம் விட்டு விடலாம்.

நம்மால் செய்யக்கூடிய சில எளிமையான பயிற்சி முறைகளுக்குத் தாவுவோம். (குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்பதால் தாவுதல் என்று சொல்வது தவறல்ல)

* நீங்கள் அமர்ந்திருக்கும் விதமும் அல்லது நிற்கும தோரணையும் உங்கள் பேச்சைப் பெருமளவு பாதிக்கும். கூடுமான வரை நிமிர்ந்திருக்கப் பழகுங்கள். கம்பீரமாக நிமிர்ந்து நிற்கப் பழகுங்கள். அது உங்கள் வார்த்தைகளுக்குக் கம்பீரமான தொனியைக் கொண்டு வரும். உங்கள் நாற்காலியை ஷாஜகானின் மயிலாசனமாக நினைத்துக் கொள்வதில் தவறில்லை.
* உரக்கப் பேசுவது சில நேரங்களில் எரிச்சலையூட்டும். அதற்காக முணுமுணுக்க வேண்டும் என்று நினைக்க வேண்டாம். அதுவும் எரிச்சலூட்டும். நீங்கள் சொல்லுவது முதலில் உங்களுக்கே தெளிவாக கேட்க வேண்டும். (விதிவிலக்கு-கிசுகிசுக்கள்)
* உங்கள் உதடுகளில் இருந்து வெளியாகும் வாக்கியங்களுக்கிடையே தெளிவான இடைவெளி இருக்க வேண்டும். நீங்கள் சொல்லுகின்ற விசயத்தை எதிரே இருப்பவரின் மனதில் ஆணி அடித்தது போல் பதியவைக்க அந்த இடைவெளி உதவும். அதற்காக அதிக இடைவெளி விடுவதும் கூடாது. ஏனென்றால் எதிரே உள்ளவர் தூங்கி விடும் ஆபத்தும் உண்டு. குறைந்த பட்சம் ஒரு கொட்டாவியாவது விடும் சந்தர்ப்பம் ஏற்பட்டு விடும்.
* உங்கள் பேச்சை ஒலிப்பதிவு செய்து நீங்களே அடிக்கடி அதனைக் கேட்டுப்பார்ப்பது ஒரு சிறந்த பயிற்சியாக இருக்கும். நெருங்கிய நண்பனையோ, நண்பியையோ பதிவு செய்ததைக் கேட்கச் சொல்லலாம். பிழைகளை சுட்டிக் காட்டச் செய்யலாம்.
* தொலை பேசியில் பேசும் போது நின்று கொண்டே பேசுவது நல்லது. (மூட்டு வலி இல்லாதவர்கள் மட்டும்) ஆணித்தரமாகப் பேச அது உதவும்.
* ஓரிரு முறை கனைத்து விட்டுப் பேசுவதில் தவறில்லை. ஆனால் பேசிக்கொண்டிருக்கும் போது கனைப்பு இடையில் வந்து தலை காட்டுவதைத் தடுக்க வேண்டும்.
* பதட்டமான விசயங்களை மற்றவர்களிடம் சொல்லும் போது அமைதியாகச் சொல்லிப் பழகுங்கள்.
* சாப்பிடும், பொருட்களின் அளவுக்கதிகமான சூடும் குளிர்ச்சியும் உங்கள் குரலின் எதிரிகள் என்பதை மறந்து விடாதீர்கள். மதுவகைகள் உங்கள் குரல் வளத்தை நிச்சயம் பாதிக்கும்.
* பிராணாயாமம் போன்ற மூச்சுப் பயிற்சிகள் குரலை இனிமைப்படுத்த உதவுகின்றன. குரல் இனிமையில்லாத ஒரு யோகியைக் கூட தான் சந்தித்ததில்லையென்று சொன்னவர் சுவாமி விவேகானந்தர்.

**மிக முக்கியமான குறிப்பு:-**

ஏனையோரின் பேச்சிலுள்ள ஏற்ற இறக்கங்களை ரசிப்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். அதை அப்படியே பின்பற்ற நினைத்தால் உங்கள் குரலுக்கென்று ஒரு தனித்துவம் இருக்காது. உங்கள் குரல்மேல் அடுத்தவருக்கு ஒரு மதிப்பும் இருக்காது.

**பின் குறிப்பு:-**

சுக்கு, மிளகு, கடுக்காய்த் தோல் வாலுழுவை இவைகளைச் சம எடையில் எடுத்து பொடி செய்து தேனில் குழைத்து,

*நக்கடா! நாவில் ஒரு மண்டலம்,*
*அக்கடா! குரல் ஆனந்தமாகுமே.*

இது சித்தர் பாடல். விரும்பினால் நீங்களும் முயற்சி செய்யலாம்.

## மெல்லுவதோ சுயிங்கம்?

ஆறிலிருந்து அறுபது வரை விரும்பி மெல்வது சுயிங்கம். விளையாட்டு வீரர்கள் விளையாடும் போது சுயிங்கத்தை வாயில் மெல்லுவது ஒரு ஸ்ரைல். அதனைப் பார்த்து விட்டு நம்து தெருவோரத்துக் கிரிக்கெட் வீரர்களும் சுயிங்கம் மெல்லுவது தெரிந்த கதைதான். இப்படியாகப்பட்ட சுயிங்கம் எப்படிக் கிடைக்கிறது தெரியுமோ? மத்திய அமெரிக்காவில் சிககலா என்றொரு காட்டுமரம் இருக்கிறது. அடிமரத்தின் பட்டையைக் கீறினால் பால் வடியும். அந்தப் பாலைச் சேகரித்துக் கொதிக்க வைப்பார்கள். அதுதான் சுயிங்கத்திற்குத் தேவையான கம்மைத் தருகிறதாம். ஆனால் இப்போதெல்லாம் சுயிங்கம் தயாரிக்க அநேகமாகச் செயற்கை முறையையே நாடுகிறார்கள் என்றாலும் இயற்கையான சுவைக்கு இணையாகுமோ?

## வரி கொடுக்கும் வழிப்பறியாளர்கள்

ஜப்பானில் திருடர்கள், கொள்ளைக்காரர்கள் ஆகியோருக்கு சிறைத் தண்டனை உண்டு. வழக்கமாக எல்லா நாடுகளிலும் வழங்கப்படுவது தானே என்று நீங்கள் நினைக்கலாம். அடுத்த வரிக்குச் செல்வதற்கு முன் அவசரப்பட்டால் எப்படி? சிறையிடப்பட்ட கொள்ளைக் காரர்கள், வழிப்பறிக்கர்ரர்கள், திருடர்கள் ஆகியோரிடம் ஜப்பானில் வருமான வரியும் வசூலிக்கப்படுகிறது. பல வகையான வருவாய் என்ற கணக்கில் அது பதியப்படுகிறதாம். நமது நாட்டிலும் அதனைப் பின்பற்றினால் என்ன? நமது நிதியமைச்சரின் கவனத்திற்கு யாராவது கொண்டு போகலாம்.

## ஆயுள் கெட்டி

முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாயிற்கு 97 வயது ஆகியும் கூட மனுசன் இப்போதும் கூட வயதான வாலிபராகவே காணப்படுகிறார். இளமையின் இரகசியம் என்ன? ஒழுக்கம், உணவுக் கட்டுப்பாடு என்பதோடு இன்னொன்றையும் மொரார்ஜி சொன்னதாக ஞாபகம். "சிறுநீரை அருந்துவது உடல் நலத்திற்கு உறுதி தரும்". நீங்களும் முயற்சிக்கலாம்.

# தகவல் பெட்டி

## வேண்டாம் வீடியோ

திரைப்படங்கள் அனைவரையும் சுண்டி இழுக்கும் இக்காலத்திலும் ஈரான் நாட்டில் திரை அரங்குகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு. திரைப்படங்களைப் பார்ப்பதற்கு ஈரான் நாட்டவர்கள் விரும்பவில்லை என்று எண்ணி விடாதீர்கள். திரைப்படங்களைக் காண்பதற்கு ஈரானியர்களுக்கும் ஆசைதான். அந்த ஆசை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருவதாகச் செய்திகள் கூறுகின்றன. ஈரானில் தனிப்பட்டவர்கள் வீடியோ வைத்திருப்பது சட்டப்படி குற்றமான விசயம். ஆனால் இருபது லட்சம் மக்களுக்கு மேல் தங்கள் வீடுகளில் அங்கே வீடியோ வைத்திருக்கிறார்கள். திரையரங்கக் குறைவால் அங்கு மசூதிகளில் கூட திரைப்படங்களைத் திரையிடுகிறார்கள். திரைப் படங்கள் மீது ஈரானிய அரசிற்கு வெறுப்பு. வீடியோ மீது கொஞ்சம் அதிகமான வெறுப்பு. ஈரானின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஆயத்துல்லாஹ் அலி கமீனி இப்படிக் கூறுகிறார், "நல்ல கோட்பாடுகளையும், பண்பாடுகளையும் சீரழிக்கும் மோசமான சாதனம் வீடியோ."

## கத்தி எடுத்தவன்...

கொலைகள் செய்வதென்றால் அவனுக்கொரு கலை. அவனது பெயர் வலறியெனோ பொர்சாடடி. (சிக்கலான பெயர்) இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவன். 1989ம் ஆண்டில் வட இத்தாலியில் ஐந்து பேரைக் கொலை செய்து விட்டுச் சிறைக்குச் சென்றான். சிறையிலும் சும்மா இருக்கவில்லை. ஒரு ஈயக்கம்பியினை எடுத்து அதனைச் சிறைக்காவலரின் வயிற்றில் செருகிக் கொன்று விட்டரன். இன்னொரு காவலரையும் கொலை செய்யத் தீவிர முயற்சி எடுத்தும் ஏனோ அது பலிக்கவில்லை. பின்னர் தன்னை மனநோயாளர் மருத்துவமனைக்கு அனுப்புமாறுஅவனே கேட்டுக் கொண்டான். போனால் போதுமென்று சிறை அதிகாரிகளும் அவனது விருப்பம் போல் அனுப்பி வைத்தனர். அங்கு மரணம் காத்திருந்தது.

ஆம், கத்தியால் பலரைச் சாக வைத்த பொர்சாட்டி மருத்துவமனையில் வைத்துக் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டான.

## வல்லவனுக்குப் புல்லும்......

திரைப்படங்களில் கதாநாயகர்கள் மிருகங்களோடு கட்டிப்புரண்டு சண்டையிடுவதைப் பார்த்திருக்கிறோம். அது நிழல். ஆனால் நிஜமாகவே அப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. ரூடி கொன்ஸல் வெஸ் என்ற 57 வயதான பிரித்தானியர் ஒரு கரடியோடும், சில ஓநாய்களோடும் வெற்றிகரமாக மோதி வீடு திரும்பி விட்டார். நடந்த கதை இதுதான். ரூடி கொன்ஸல் வெஸ் என்ற அந்தப் பிரித்தானியருக்கு 57 வயதிலும் ஒரு ஆசை. ரோமானியாவிலுள்ள பனி நிறைந்த மலைகளில் சறுக்கி விளையாட ஆசை. விளையாடிக் கொண்டிருக்கும் போது பனிக்கட்டிகளைச் சமப்படுத்துவதற்குப் பயன்படுத்தும் இயந்திரம் தற்செயலாக ஒரு தவறு செய்து விட்டது. பனிக்கட்டிகளோடு பனிக் கட்டிகளாக அவரையும் அள்ளிக்கொண்டு சென்று விட்டது. கொண்டு சென்று ஒரு கணவாயில் வீசி விட்டது. கொட்டும் பனியில் தன்னந் தனியாக இரண்டு இரவுகள் அவர் அவதிப்பட்டுக் கொண்டிருக்க ஒரு கரடியும், மூன்று ஓநாய்களும் தாக்குதல் தொடுத்தன. அவர் பயந்து விடவில்லை. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். அந்தப் பனிச்சறுக்கு விளையாட்டு வீரர் சறுக்கு விளையாட்டுக்குப் பயன்படுத்தும் ஊன்றுகோலையே ஆயுதமாகப் பாவித்தார். ஓநாய்களும் கரடியும் ஓடித்தப்பி விட்டன. அவரும் உயிரோடு மீண்டார்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## இரவல் பக்கம்



# வீரப்ப விளையாடல்



வீரப்பன் இந்தியாவில் தமிழ்நாடு, கர்நாடக எல்லைப் புறத்திலுள்ள காடுகலில் பதுங்கியிருக்கும் சந்தன மரக் கடத்தல்காரன். ஆரம்பத்தில் யானைகளைச் சுட்டு வீழ்த்தித் தந்தங்களை விற்பனை செய்து வந்தவன். முன்னூறு யானைகளுக்கு மேல் வீரப்பனால் வேட்டையடப்பட்டதாகக் கூறுகிறார்கள். தமிழகக் கர்நாடகப் பொலிசார் வீரப்பனைப் பிடிப்பதற்நச் செய்த முயற்சிகள் அனைத்தும் விபரீதத்தில் முடிந்திருக்கின்றன. காடு வீரப்பனுக்கு வீடு மாதிரி. அங்கு பதுங்கு குழிகள் உண்டு. புதிய உறுப்பினர்களுக்குத் துப்பாக்கி சுடும் பயிற்சிகள் வழங்கப்படுவதும் உண்டு.

அண்மையில் வீரப்பன் வைத்த கண்ணி வெடியில் 22 பொலிசார் உருக்குலைந்தார்கள். அது உலகச் செய்தியானது.

தமிழகப் பத்திரிகைகளில் படிப்படியாகத் தலைப்புச் செய்திகளில் இடம்பெற் வீரப்பன், இப்போது உலகச் செய்திகளில் அடிபடும் அளவிற்கு உயர்ந்து விட்டான்.

வீரப்பனுக்கும் புலிகளுக்கும் தொடர்பிருப்பதாகத் தமிழக பொலிஸ் சந்தேகப்படுகிறது. அதெல்லாம் சுத்தப்பொய் என்று வீப்பனால் மறுக்கப்பட்டிருக்கிறது.

வீரப்பன் போன்ற கடத்தல்காரன் இரு மாநில பொலிசாருக்கு சவால் விடும் அளவிற்கு எப்படி வளர முடிந்தது? காரணம் அரசியல் தான்.

அரசியல்வாதிகள் சிலே குறுக்கு வழியில் முன்னேற விரும்பும் வியபாரிகளாக ஆசைப்படுகிறார்கள். அர்களது உதவியில்லாமல் வீரப்பன் வளர்ந்திருக்கமுடியாது என்பது தமிழ்நாட்டில் பேசப்படு பலமான அபிப்பிராயம். காட்டுக்குள் வீரப்பன் வெட்டிய பதுங்கு குழிகளைக் கண்டு தமிழகப் பொலிசரும், கர்நாடகப் பொலிசாரும் மூக்கில் எலை வைக்கிறார்கள். முன்னாள் இராணுவ வீகள் வீரப்பனோடு சேர்ந்திருக்கலாமென்று இனொரு சந்தேகம். ஆனால், அதையும் வீரப்ன் மறுத்திருக்கிறான். இரண்டு மாநிலத்தை எதத்துப் போராடும் எனக்கு அந்த அறிவு கூட இல்லமல் போகுமா என்பதுதான் வீரப்பனின்கேள்வி.

எது எப்படியோ வீரப்பவிவகாரத்தால் தமிழக, கர்நாடக அரசுகள் திணகின்றன. வீரப்பனைப் பிடித்துக் கொடுத்தால் நற்பது லட்சம் தரப்படும் என்று இரு மாநில முதலர்களும் கூட்டாக அறிவித்திருக்கிறார்கள்.

வீரப்பன் தற்போது பதுங்யுள்ள காட்டுப்பகுதி யாழ் குடாநாட்டைவிட அக பரப்பளவுள்ள பகுதியாகும். நூற்றுக்கும் ற்பட்ட கிராமங்களில் வீரப்பனுக்கு விசுவாசிகள்ண்டு.

சந்தன கடத்தல் வீரப்பனை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு நாற்பது லட்ச ரூபாய் பரிசு அறிவிக்கப்பட்டபின் வீரப்பனை விட மிகவும் உஷாரானது கான்ஸ்டபிள் சுப்புராஜனின் மனைவியாகத்தான் இருக்க முடியும்.

மெட்ரோ சானலில் திருவிளையாடல் பார்த்துக் கொண்டிருந்தவனை 'படுத்தி'னாள். "இப்படியே டி.வி. பார்த்துக் கொண்டிருந்தால் என்னாவது, வாழ்க்கையில் உயர வேண்டாமா. வீரப்பனை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 40 லட்ச ரூபாய் பரிசு என்று அறிவித்திருக்கிறார்கள். அவன் நமக்கு வேண்டாம்; அவன் தம்பி அர்ஜுனனை பிடித்துக் கொடுத்தால் 20 லட்ச ரூபாய் பரிசென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காகவாவது ஏதாவது ஐடியா பண்ணக் கூடாதா?" என்றாள்.

சுப்புராஜ் யோசித்தார். யோசிக்க யோசிக்க கொட்டாவிதான் வந்தது. சரி குப்புறப்படுத்து யோசிப்போம் என்று குப்புறப்படுத்துக் கண்களை மூடினார்.

"ஐயோ.... ஒரு லட்சமா, ரெண்டு லட்சமா நாற்பது லட்ச மாச்சே. நான் என்ன பண்ணுவேன், எங்க போவேன், எனக்கு கையும் ஓடல காலும் ஓடல. வீரப்பனை புடிக்கிறதுக்கு ஒரு நல்ல ஐடியா தோணினா முதல்வர் கிட்ட ஓ.கே. வாங்கி கொஞ்சம் போலீசோட போயி வீரப்பனை புடிச்சி 40 லட்ச ரூபாய் வாங்கிக்கலாம். அவன் தம்பியையும் சேர்த்து புடிச்சு இன்னும் 20 லட்சம் வாங்கி அதை கூட வர்ற போலீஸ்காரர்களுக்கு கொடுக்கலாமே..... நல்ல ஐடியா ஒண்ணுதான் தோண மாட்டேங்குது, மத்ததெல்லாம் தோணுது."

அந்த நேரம் பார்த்து ஒருவர் அங்கே வருகிறார்.

"யோவ் 304."

"யாருய்யா நீ....? என் நம்பர் சொல்லி கூட்பிடறே."

"வீரப்பனை பிடிக்க ஐடியா கிடைத்து விட்டதா?"

"உனக்கும் தெரிஞ்சுடுச்சா? ஊர்ல ஒருத்தன் விடாம 40 லட்ச ரூபா மேட்டர் எல்லாருக்கும் தெரிஞ்சுடுச்சா... அப்ப பரிசு எனக்கு இல்ல... இல்லவே இல்ல....."

" யோவ் 304. வீரப்பனை பிடிக்க நல்ல ஐடியாவை நான் உனக்கு சொல்றேன்."

"என்னது... நீ...நீ... எனக்கு ஐடியா கொடுக்கறியா? யார்யா நீ?"

"நான் 555."

"சிகரெட்டா?"

"இல்லையா ஏட்டு!"

"எந்த ஸ்டேஷன்?"

"பிளாட் பார்ம் கடைங்க இருக்கற பஸ் ஸ்டேஷன்."

"ஓ.. பிளாட் பார்ம் கேஸா? நீ எனக்கு ஐடியா சொல்ற. எல்லாம் டைம்யா!"

"என் திறமை மீது நம்பிக்கையில்லாவிட்டால் பரீட்சித்துப் பார் உனக்கு திறமை இருந்தால்!"

"என்னது.. என்.. என்கிட்டியே சவால் உடறயா?"

இதோ கேள்வி....

"பார்க்கக் கூடாதது எது?"

"பர்ஸ்ட் சேனல்."

"பார்த்து ரசிப்பது?'

"ஸ்டார் டி.வி.."

"பார்க்க முடியாதது?"

"நரசிம்ம புன்னகை."

"பிரியக்கூடாதது?" –"லஞ்சமும் ஊழலும்."

"சேரக் கூடாதது?" – அ.தி.மு.க.வும் காங்கிரஸும்."

" ஒட்டியே இருப்பது?" – " நாற்காலியும், பதவியும்."

"கலையில் சிறந்தது?" – ஜால்ரா அடிப்பது."

"அதிர்ஷ்டம் என்பது?" – கள்ள சாராய பகுதியில் கான்ஸ்டபிளாய் இருப்பது."

"துரதிருஷ்டம் என்பது?" – "கட்-அவுட் கீழே காவல் காப்பது."

"அரசு சாராயம்?" – கெட்டமில்லி."

"பட்டை சாராயம்?" – நல்லமில்லி."

"நல்ல இன்ஸ்பெக்டர் என்பவர்?" – "லஞ்சத்தை சரிசமமாக பங்கிடுபவர்."

"நடைக்கு?" "குஷ்பு."

"இடைக்கு?" – "குஷ்பு."

"உடைக்கு?" – "குஷ்பு."

"பிளவுஸ் என்பது?" – "பிராவை மறைப்பது."

"பெல்ட்?" – தொப்பையை மறைப்பது."

"ஐயா நீரே திறமைசாலி" என்று ஏட்டுவின் காலில் விழுந்தார் சுப்புராஜ்.

"என்ன இது சட்டசபையில் நடந்துக்கற மாதிரி நடந்துக்கறீங்க! எழுந்துருங்க. இந்தாங்க வீரப்பனை பிடிப்பதற்கு திட்டம் ஒன்றை இந்தப் பாடலில் ரகசியமாக கூறியுள்ளேன். இதை முதல்வரிடம் காட்டினால் பரிசு உமக்கு நிச்சயம்."

"ஒரு சந்தேகம். பரிசு கிடைத்தால் நான் வாங்கி வந்து விடுகிறேன். வேறு ஏதாவது கிடைத்தால்?"

"என்னிடம் வா நான் பார்த்துக் கொள்கிறேன்."

"அது சரி நீர் எங்கே இருப்பீர்?"

"எங்கெங்கே கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்களோ அங்கெல்லாம் இருப்பேன்."

"மந்திரியோட சொந்தக்காரர் போலருக்கு."

"தமிழ்த்தாயே, அன்னை அகிலாண்டேஸ்வரியே, புரட்சித் தலைவியே, மாதேவியே, பூமாதேவியே, பராசக்தியே, ஆதிபராசக்தியே, பெரிய மனது செய்து என்னை சட்டசபைக்குள் அனுமதித்ததற்கு என் நன்றிகளை உடம்பாக்கி அதை உங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன். சந்தனக் கடத்தல் வீரப்பனை பிடிக்க அருமையான திட்டம் ஒன்றை வகுத்து அதை பாட்டில் வடித்து வந்துள்ளேன். திட்டம் தங்களுக்கு பிடித்திருந்தால் உங்கள் நல்லாசியுடன் வீரப்பனை கைது செய்து உங்கள் காலடியில் கிடத்துவேன் என்று வீரத்துடன் விவேகத்துடன் ஆவலுடன் கூறிக் கொள்ள விழைகிறேன்" என்று சட்ட மன்றத்தில் பெரும் கஷ்டப்பட்டு நுழைந்து சுப்புராஜ் கூற, முதல்வர் "சரி பாடலை படியுங்கள்" என்கிறார்.

**"கொம்பு தேன் வாழ்க்கையில்**
**வீரப்பன் தும்பி**
**கர்மஞ் செய்யாது பிடிப்பது**
**தகுமோ**
**பயில்வான் கெழ்கிற நட்பின்**
**மலையினிற்**
**செருகியிற் கண்ணி வெடியில்**
**நரியவும் உளவோ வீரப்பன்**
**சாவே!"**



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

"அற்புதமான பாடல் ஆழ்ந்த கருத்துக்கள். அருமையான திட்டம். யாரங்கே? அட்வான்ஸ் செக் 20 லட்ச ரூபாய்க்கு எழுதி வாருங்கள்" என்று முதல்வர் கூற,

"அகிலாண்டேஸ்வரி தாயே, புரட்சித் தலைவி அவர்களே! ஒரு நிமிடம் பொறுங்கள். பாட்டில் பிழையிருக்கிறது" என்று நாவலர் கூறி முதல்வர் செக்கில் கையெழுத்திடுவதை நிறுத்துகிறார்.

"பிழையா?என்ன பிழை?" என்று முதல்வர் வினவ,

"முதலில் பாட்டே புரியவில்லை. காவலரே! இப்படி கொஞ்சம் வாரும்!" என்கிறார். காவலர் சுப்புராஜ், " நாவலர் பெருமானே, புரட்சித் தலைவிக்கே புரிந்து விட்டது இடையில் நீர் என்ன? செக்கை வாங்கிக் கொண்டு வருகிறேனே. கையெழுத் திடுங்கள் தாயே!"

"தமிழ்த்தாயே, வேண் டாம் செக்கில் கையெழுத்திடாதீர்கள்."

"ஜான்ஸிராணி தாயே, உங்க ளையே எதிர்த்து பேசுகிறார் இந்த நாவலர். கொஞ்சம் கவனியுங்கள்."

"திருவாளர் சுப்புராஜ் அவர்களே, அன்னை ஆதிபராசக்திக்கு என்னைப் பற்றி நன்கு தெரியும். புரட்சித் தலைவி அகிலாண்டேஸ்வரியாக இருந்து கட்டிக்காக்கின்ற இந்த தமிழ் மண்ணில், அவர்கள் சுட்டிக் காட்டிய இடத்தில் உட்கார்ந்து தொண்டாற்றும் நன்றியுள்ள நாய் நான். உங்களுடைய செயல்திட்டம் சரியாக இருக்கலாம். அது சரியாக இல்லாவிட்டாலும் மன்னித்து விடலாம். ஆனால் பாட்டில் பிழையிருக்கிறது. தவறான ஒரு பாட்டுக்கு புரட்சித் தலைவியின் ஆட்சியில் பரிசளிக்கப்பட்டு விட்டால் வரலாற்றில் மாறாத வடு ஏற்பட்டு விடும். அதனால் பாட்டின் ஒவ்வொரு வார்த்தைக்கும் பொருள் சொல்லி அட்வான்ஸ் செக்கை பெற்றுச் செல்லலாம்."



"பாட்டின் பொருள் விளக்கப் பட்டால் வீரப்பனை பிடிக்கும் இரகசிய திட்டம் அம்பலமாகி விடுமே நிதி அமைச்சரே!"

"அப்படி நீங்கள் கருதினால் என் காதில் மட்டும் வந்து சொல்லுங்கள்."

சுப்புராஜ் நாவலர் காதருகே போய் "திட்டம்தான் சரியாக இருக்கிறதே நாவலரே. பாட்டில் பிழையிருந்தால் என்ன? உமக்கு தேவைப்படுவதை சொல்லுங்கள் அன்பளிப்பு செய்து விடுகிறேன்."

"மிஸ்டர் சுப்புராஜ் அதிக பிரசங்கித்தனம் வேண்டாம்."

"போங்கய்யா நீங்களும் உங்க செக்கும். செக்கும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாம்" என்று சொல்லிவிட்டு விடுவிடுவென்று நடக்க ஆரம்பிக்கிறார் சுப்புராஜ்.

"மிஸ்டர் சுப்புராஜ்... மிஸ்டர் சுப்புராஜ்..." என்று நாவலரும் பிற அமைச்சர்களும் கூற அங்கிருந்து ஓடி வந்து விடுகிறார்.

"என்ன சுப்புராஜ் பரிசு கிடைச்சுதா?"

"வாய்யா ஏட்டு "பரிசும் கிடைக்கல ஒரு எழவும் கிடைக்கல. கொஞ்ச நேரம் நின்னுருந்தா வேட்டியும் கிடைச்சிருக்காது."

"நடந்ததை சொல்லுங்கள்" என்றார் ஏட்டு. சுப்புராஜும் சொன்னார்.

"அடடா அவசரப்பட்டு வந்துட்டீங்களே. இன்னும் கொஞ்ச நேரம் பொறுமையா இருந்திருக்கலாமே."

"அட நீங்க வேற நாவலர் கிட்டே பேசிக்கிட்டிருந்தப்ப பின்னாடி தாமரைக்கனி வந்து நிக்கறா மாதிரி ஒரே பிரமையா இருந்துது. நம்மால அடியெல்லாம் வாங்க முடியாதுப்பா. அதுதான் ஓடியாந்துட்டேன். ஒண்ணு பண்ணலாமா?"

"என்ன..?"

"நீங்க வந்து வாதாடுங்க..."

"என்னது சட்டசபையில ஆளுங்கட்சிக்கு எதிரா வாதாடணுமா? நடக்கற காரியமா பேசுய்யா?"

"பாட்டு சரியாத்தான எழுதியிருக்கீங்க! குத்தம் கித்தம் இல்லீங்களே?"

"குற்றமா... என் பாட்டிலா... எரிச்சலை கிளப்பாதீர்கள்!"

"அப்ப சட்டசபைக்கு வாங்க."


"வந்து வாதாடறதுக்கு நான்தயார். ஆனா அவங்க கேக்க தயாரா இருக்கணுமே... அங்க எதிர்கட்சி எம்.எல்.ஏங்க கருத்தையே சொல்ல விடறதில்ல. நம்மல வாய் திறக்க விடுவாங்களா... பேசாம பெரிய்ய கோயில், இல்லாட்டி பாங்க் ஏதாச்சும் பாரு உருப்படியா கொள்ளையடிக்கிறது பற்றியாவது யோசிக்கலாம்" என்றார் ஏட்டு.

"அய்யோ இருபது லட்சம் போச்சே, இருபது லட்சம் போச்சே" என்று முனகிக் கொண்டிருந்த சுப்புராஜை எழுப்பினாள் வனஜா.

"குப்புறப்படுத்து தூங்காதீங்க, குப்புறப்படுத்து தூங்காதீங்கன்னு எத்தனை தடவை சொல்றது? என்ன, கனவுல வீரப்பன் தம்பி அர்ஜுனனை புடிச்சு விட்டுட்டாங்களாக்கும். எழுந்து ஸ்ட்ராங்கா டீ குடிச்சுட்டு உருப்படியா யோசியுங்க" என்றாள் வனஜா. சுப்புராஜிக்கு, கனவில் ஏட்டுவிடம் அந்தப் பாடலுக்கு அர்த்தம் கேட்காமல் விட்டுவிட்டது பெரிய வருத்தமாயிருந்தது.

## அயோத்தியில் மணிரத்தினம்

சமீபகால அயோக்கியத்தனங்களில் ஒன்று இந்தியாவில் அயோத்தியில் நடைபெற்ற மசூதி இடிப்பு. இந்தியாவின் மதசார்பின்மையைச் சந்தேகிக்கச் செய்த சம்பவம் அது. அயோத்தி விவகாரம் குறித்து இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளியுலகிலும் பெரிதும் பேசப்பட்டது. அரசியலின் அசிங்கமான சித்து விளையாட்டில் மசூதி சிதறியது. அயோத்தி விவகாரம் இந்தியாவில் மனச்சாட்சி உள்ள



அனைவராலும் கண்டிக்கப்படுகிறது. காட்டுத்தனமென்று விமர்சிக்கவும் படுகின்றது.

சில சந்தர்ப்பங்களில் காரசாரமான சாடல்களை விட நகைச்சுவை கலந்த குத்தல்களுக்குப் பலம் அதிகம்.

ஒரு வரியில் உரையாடல் எழுதுவதில் புகழ் பெற்றவர் இயக்குநர் மணிரத்தினம் என்பது எவரும் அறிந்த விடயம். சமீபத்தில் நடந்த அயோத்திப் பிரச்சினையைத் திரைப்படமாக மணிரத்தினம் எடுத்தால் எப்படி இருக்கும் என்ற கற்பனை இது.

தமிழகப் பத்திரிகையொன்றில் சகோதரப் பத்திரிகையாளர் விஜி எழுதியது.

நரசிம்மராவ்:- மசூதி இடிஞ்சி போச்சி
வி.பி.சிங்:- எப்படி?
ராவ்:- இடிஞ்சி போச்சி.
வி.பி.சிங்:- அதுதான் எப்பிடின்னு கேட்கறேன் இல்ல?
அத்வானி:- நான் தான் இடிச்சேன்.
ராவ்:- நான் ஒண்ணும் இடிக்கச் சொல்லலை.
வி.பி.சிங்:- ஆனா இடிக்கறதைப் பாத்துக்கிட்டு இருந்தீங்க.
ராவ்:- இடிப்பாங்கன்னு தெரியாது.
வி.பி.சிங்:- கடப்பாரை எடுத்துக்கிட்டு போறத பாத்தீங்க இல்ல.
ராவ்:- பார்த்தேன்.
சவான்:- நானும் பார்த்தேன்.
வி.பி.சிங்:- பின்னே ஏன் தாக்கலை?
ராவ்:- அது பூஜை பண்ணன்னு சொன்னாங்க.
வி.பி.சிங்:- கடப்பாரையை வச்சு என்ன பூஜை?
அத்வானி:- ஆயுத பூஜை.
கல்யாண் சிங்:- ஆமா ஆயுத பூஜை
வி.பி.சிங்:- இதை நீங்க நம்பினீங்களா ராவ்?
ராவ்:- நம்பினேன்.
வி.பி.சிங்:- எப்படி?
ராவ்:- எழுதிக் கொடுத்தாங்களே!
வி.பி.சிங்:- என்னன்னு?
ராவ்:- அயுத பூஜை மட்டும் தான்னு.
வி.பி.சிங்:- பின்னே ஏன் இடிச்சாங்க?
ராவ்:- ஏமாத்திட்டாங்க.
அத்வானி:- நாங்க ஒண்ணும் ஏமாத்தல.
ராவ்:- பின்னே இது என்ன?
கல்யாண் சிங்:- நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க.
அத்வானி:- ஆயுத பூஜைன்னா என்ன தெரியுமா?
ராவ்:- ஆயுதங்களை வச்சுப் பூஜை பண்ணுறது.
கல்யாண் சிங்:- உங்க ஊர்ல வேணும்னா இருக்கலாம்.
ராவ்:- பின்னே வேற என்ன?
அத்வானி:- பூஜை பண்ற இடத்தை ஆயுதத்தால இடிக்கறது.
ராவ்:- இல்ல நீங்க ஏமாத்தறீங்க.
வி.பி.சிங்:- சரி இப்ப என்ன பண்றது?
ராவ்:- நாலு வருஷம் கழிச்சு கேளுங்க சொல்றேன்.
வி.பி.சிங்:- இல்ல உடனே திருப்பிக் கட்டியாகணும்.
அத்வானி:- கண்டிப்பா அது நடக்காது.
வி.பி.சிங்:- அப்ப நான் உண்ணாவிரதம் இருப்பேன்.
அத்வானி:- நானும் ரதயாத்திரை போவேன்.

(இருவர் சண்டையும் தாங்க முடியாமல் ராவ் மயக்கம் போட்டு விழுகிறார்.)

எல்லாருமாக ராவைச் சுற்றி நின்று கொண்டிருக்க......

வி.பி.சிங்:- ராவ் ஏந்திரிங்க ராவ்... ராவ் ஏந்திரிங்க ராவ்....
அத்வானி! ராவை ஏந்திரிக்கச் சொல்லுங்க அத்வானி!
கல்யாண் சிங்! ராவை ஏந்திரிக்க சொல்லுங்க கல்யாண் சிங்!
ராவ் ஏந்திரிங்க ராவ்.

(நரசிம்மராவ் -இ. பிரதமர், வி.பி.சிங் - இ.முன்னாள் பிரதமர், சவான்- இ.பாதுகாப்பு அமைச்சர், அத்வானி- பாரதிய ஜனதா கட்சித் தலைவர், கல்யாண்சிங் - அயோத்தி அமைந்துள்ள உத்தரப் பிரதேசத்தின் முன்னாள் முதல்வர்)

✪ ✪ ✪

## சொன்னார்கள்

என் ஒவ்வொரு கவிதையிலும் உயிர் ததும்பிக் கொண்டிருக்கிறது.
-வைரமுத்து-

பலமில்லாத ஆண் மகனுக்கும் காதல் நேரத்தில் யானைப் பலம் வருவதுண்டு. துவளும் கொடிபோன்ற மாதர்களும் அப்போது அடலேறுகள் போல் மாறுவதுண்டு.
-கவியரசு கண்ணதாசன்-

அற்புதமான மனிதர்கள், அயோக்கியர்களுக்கு நடுவில் இங்கும் வாழ்கிறார்கள். நாம் தேர்ந்தெடுத்துக் கொள்கிற ஜாக்கிரதைக்கும் புத்திசாலித்தனத்துக்கும் இது ஒரு சவாலாக அமையும். இதில் நீங்கள் ஜெயித்தீர்கள் என்றால் உங்கள் வாழ்க்கை ஆனந்தமாக இருக்கும்.
-பிரபஞ்சன்-

தன்னையும் பிறரையும் ஒருங்கே உணர்வதில் தான் இன்னொரு தலைமுறை வளமாக வாழ முடியும்.
-பாலகுமாரன்-

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அமெரிக்க யுவதிகளின் செக்ஸ் ஆசைகள்



உண்மைகளைக் கண்டுபிடிப்பதில் அமெரிக்கர்கள் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளுகிறார்கள். செக்ஸ் விஷயத்திலும் அப்படித்தான்.

செக்ஸ் விடயத்தில் ஆண்களும் பெண்களும் என்ன நினைக்கிறார்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைக் கண்டறிய உயர்தர பாலியல் நிபுணர்கள் குழு ஒன்று புறப்பட்டது. அது அமெரிக்காவின் பல கட்டில் அறைகளுக்குள் புகுந்து செக்ஸ் சமாச்சாரங்கள் பலவற்றைக் கண்டு பிடித்துள்ளது.

'அமெரிக்கா உண்மையைச் சொன்ன நாள்' என்ற புத்தகம் செக்ஸ்தொடர்பாக சூடான உண்மைகளோடு வெளிவந்திருக்கிறது. அந்தப் புத்தகத்தில் உள்ள தகவல்கள் சுவாரசியமானவை. அவற்றில் சிலவற்றைக் கீழே தருகிறோம்.

- அமெரிக்கப் பெண்களில் பெரும்பாலானோர் மதிய உணவு வேளையில் உணவு உட்கொள்வதை விரும்பவில்லையாம். செக்ஸில் ஈடுபடத்தான் விரும்புகிறார்களாம்.
- ஆண்களும், பெண்களும், பொதுவாக, புகழேணியின் உச்சியில் இருப்பவர்களோடு தான் இன்பம் அனுபவிக்க விரும்புகின்றனர். மடோனா மீது அதிகமான ஆண்களுக்கு ஒருகண். பெரும்பாலான பெண்கள் மெல்கிப்ஸனை, ரொபேட் ரெட்போட் ஆகியோர்மீது விருப்பம் கொண்டுள்ளனர். சில பெண்களுக்கு ஜோர்ஜ் புஷ் மீதும் ஒருகண்.
- அறுபத்தேழு சதவீதமான பெண்கள் மோட்டார் வண்டியில் காதல்விளையாட்டில் ஈடுபடுவதையே விரும்புகின்றனர்.
- ஆண்களில் நாலபது சதவீதமானோர் வெளியிடங்களில் இன்பம் அடைய விரும்புகின்றனர். எழுபது சதவீதமான பெண்களும் அவ்வாறே விரும்புகின்றனர்.
- அதிகமான பெண்கள், ஆண்களின் உறுதியான தோளைப்பற்றியே அவர்களை பாலக் கவர்ச்சி உடையவராக காட்டுகின்றது என்று கருதுகின்றனர்.

## பிரமிப்பூட்டும் காதல் தம்பதியின் துணிச்சலான தொலைக்காட்சிப் பேட்டி!

"எங்கள் வாழ்க்கையில் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லாவிட்டால் நாங்கள் கட்டிலறையை விட்டு வெளியே எட்டிப் பார்க்க மாட்டோம்."

பிரமிப்பூட்டும் காதல் தம்பதியினரின் துணிச்சலான பேட்டியைக் கண்டு அமெரிக்காவின் எண்பது லட்சம் தொலைக்காட்சி பார்வையாளர்கள் அதிர்ந்து தான் போனார்கள்.

அப்படி என்னதான் சொன்னார்கள் என்று அறியத் துடிக்கிறீர்கள் அல்லவா?

தங்கள் அந்தரங்க குறும்புகளில் ஆரம்பித்து அவர்கள் விவரித்த சம்பவங்கள் விறுவிறுப்பானவை. அவர்களது நாட்குறிப்பில் அந்தரங்க வாழ்க்கையின் சுவாரசியமான கட்டங்கள் குறித்து வைக்கப்பட்டு இருக்கின்றன. அந்த நாட்காட்டியைப் படிப்பதற்கு அடுத்த வாரம் வரை நீங்கள் காத்திருக்கத்தான் வேண்டும்.



## விலை உயர்ந்த விளம்பர அழகிகள்

விளம்பரத்துறை வேகமாக வளர்ந்து வருகிறது. விளம்பரப் போட்டிகள் அதிகமாகி விட்டன. விளம்பரத்துறையை ஆக்ரமித்திருக்கும் மிக முக்கியமான சக்தி மொடலாக அழகிகளைப் பயன்படுத்துவது. விளம்பரத்துக்கு போஸ் கொடுக்கும் அழகிகள் ஏராளமான தங்கள் பொன் மேனியை கண்களுக்கு விருந்தாக்கும் கவர்ச்சிப் பாவைகள் சம்பாதிக்கிறார்கள். சினிமா நட்சத்திரங்களை விட விளம்பர அழகிகள் அதிகமாக சம்பாதிக்கிறார்கள்.

முன்பு சோப்பு விளம்பரத்துக்கு அழகிகள் போஸ்கொடுத்தார்கள். இப்போது ஆண்களின் சேவிங் ரேஸர் விளம்பரத்துக்கும் போஸ் கொடுக்கிறார்கள். அழகிகளுக்குள் அழகு விடயத்தில் ஒரு மூக்குப்பிடிப் போட்டி. ... உதடுகள் கொஞ்சம் கூடுதலான மார்புகள் ... விளம்பர உலகில் ஏக கிராக்கி.



தூரத்து நாகரீகம்

அடுத்துவரும் நிஜமாக வாரமலர்
அதிக பக்கங்கள்
அதிக அம்சங்கள்
பிரதிக்கு மூந்துங்கள்



இப்பத்திரிகை டி.டி. எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினரால் கொழும்பு கிருலப்பனை சோமாதேவி பிளேஸ், 88/14ஆம் இலக்கத்தில் 1993ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.